ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,842 — 1969 පෙබරවාරි 21 වැනි සිකුරාදා — 1969.2.21

14,842 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 175 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 187 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 191 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 199 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 200 |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **கேள்விக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத் தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.**—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) தம்மு கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. **யுத்தச்சேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளையிட்டு விலகியவர்களை ஒழிந்த முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினல் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும், உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாகப் பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## பரீட்சைப் பகுதி

### உதவிப் பரீட்சை அத்தியட்சகர் பதவி

பரீட்சைப் பகுதியில் உதவிப் பரீட்சை அத்தியட்சகர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இத்துடன் கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் நிரப்பப்பட்டு பதிவுத் தபாலில் 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதியில் அல்லது அதற்கு முன்னர் மலே வீதி, கொழும்பு—2 இல் உள்ள பரீட்சைப் பகுதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

**2. சம்பளம் :**

இப்பதவிக்குரிய சம்பளம் வருடம் 3,420 ரூபாவாகும். இது 4 வருட 120 ரூபா உயர்வுடனும், 8 வருட 180 ரூபா உயர்வுடனும், 6 வருட 240 ரூபா உயர்வுடனும் வருடம் 6,780 ரூபாவுக்கு உயரும். திறமை எல்லைகள் 4,080 ரூபாவுக்கு முன்னரும், 4,800 ரூபாவுக்கு முன்னரும் 5,580 ரூபாவுக்கு முன்னருமாகும்.

3. நியமன நிபந்தனைகள் :

பதவி நிரந்தரமானதும் ஓய்வுச் சம்பளமுடையதுமாகும். இந்நியமனம் முதலில் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். நிரந்தர உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் இவர் பதில் நியமனத்தைப் பெறுவர்.

4. தராதரங்கள் :

விண்ணப்பிப்பவர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றுக்குச் சான்று தருதல் வேண்டும்.

(அ) 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதியில் 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயது வரையறை இல்லை).

(ஆ) மதிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

(இ) குறைந்தது 5 வருடக் கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும். கல்விப் பகுதியில் பரிசோதகர் சேவையும், அரசாங்கத்தில் வேறு ஏதாவது கல்வி சம்பந்தமான பதவிகளில் பெற்ற சேவையும், கற்பித்தல் அனுபவம் எனக்கருதப்படும்.

(ஈ) தமிழ் மொழியில்/சிங்கள மொழியில் க. பொ. த. பத்திரம் (சாதாரண தரம்) பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இதற்குச் சமமாகவுள்ள தராதரம்.

(அ) மற்றைய தேசிய மொழியை வாசிக்கும் ஆற்றல் எழுதும் ஆற்றல்.

(ஆ) ஆங்கிலத்தில், தமிழ் அல்லது சிங்களத்தில் தட்டச்சுப் பொறிக்கும் ஆற்றல் என்பன தேர்வுக்குச் சாதகமான மேலதிக தராதரங்களாகும்.

(உ) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராக இருத்தல் வேண்டும்.

5. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் பின்வரும் உறுதிப் பத்திரங்களையும் கொண்டுவருதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆங்கிலத்தில் பெற்ற உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) தமிழ்/சிங்களத்திற் பெற்ற உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(ஈ) குறைந்தது 5 வருட கற்பித்தல் அனுபவத்தை நிரூபிக்கும் சான்றுப் பத்திரங்கள்.

(உ) அண்மையிற் பெற்ற நல்லொழுக்கச் சான்றிதழ்கள் மூன்று (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இச்சான்றிதழ்கள் தேவையில்லை).

6. இப்பதவி சம்பந்தமான விண்ணப்பங்கள் அல்லது கடிதங்கள் கொழும்பு 2, மலே வீதியில் உள்ள பரீட்சாதிகாரிக்கு முகவரியிடப்படல் வேண்டும். என் சொந்த முகவரிக்கோ, இப்பகுதியிலுள்ள வேறு உத்தியோகத்தருக்கோ முகவரியிடப்படல் கூடாது. விண்ணப்பஞ் செய்பவர் "உதவிப் பரீட்சை அத்தியட்சர் பதவி" என தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதல் வேண்டும்.

7. இவ்வர்த்தமானியிலுள்ள பகுதி I, பிரிவு II இல் உள்ள அரசாங்க சேவைக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்க்கவும். இந் நிபந்தனைகளுக்கேற்ப அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2, 14, பெப்பிரவரி, 1969.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### உதவிப் பரீட்சை அத்தியட்சகர் பதவிக்கு விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————
(தெளிவான எழுத்துக்களில்)

2. முகவரி :————

3. இப்பொழுது வகிக்கும் பதவியும் உத்தியோக முகவரியும் :————

4. (அ) நீர் எத்தகைய இலங்கைப் பிரஜை எனக் கூறுக—

(i) வம்சாவளிப் பிரஜையா :————

(ii) பதிவுப் பிரஜையா : பதிவுப் பிரஜையாயின் பதிவுப் பத்திர எண்ணைக் குறிப்பிடுக :————

(ஆ) பிறந்த இடம்—

(i) விண்ணப்பிப்பவர் :————

(ii) விண்ணப்பிப்பவரின் தந்தை :————

(iii) விண்ணப்பிப்பவரின் பாட்டனுர் :————

(iv) விண்ணப்பிப்பவரின் பூட்டனுர் :————

5. பிறந்த தேதி :———— வயது :———— (6.3.1969 இல் உள்ளபடி)

6. உயர்தர பாடசாலை விபரக் குறிப்பு. பாடசாலைப் பெயர், வருடங்கள், விசேட பரிசில்கள் முதலியன :————

7. பல்கலைக் கழகக் கல்வி :————
(பல்கலைக் கழகத்தின் பெயர், பட்டம், சித்தியெய்திய தரம், வகுப்பு, பாடங்கள், வருடங்கள், விசேட பரிசில்கள், முதலியன).

8. கல்வித் தகைமைகள் :———— தமிழ்/சிங்களம் (விபரங்கள்) :————

9. உத்தியோக தராதரங்கள் (இருப்பின்) :————

10. பாடசாலை/பல்கலைக் கழகத்தைவிட்ட பின்னர் வகித்த உத்தியோகங்கள் (பதவி, நிலையம், வருடம்) :————

11. கற்பித்தல் அனுபவம் :————சேவைக் காலம் :————

12. அனுபவம் எவ்வாறு பெற்றீர்—

(i) ஆசிரியராகவா :————

(ii) கல்விப் பகுதியில் பாடசாலைப் பரிசோதகராகவா :————

(iii) அரசாங்க வர்த்தமானியில் பந்தி (4) இல் குறிப்பிட்ட ஓர் அரசாங்க கல்விப் பகுதியில் ஏதாவது ஒரு வேலை செய்யும் உத்தியோகத்தராகவா : இதன் விபரங்கள் கால எல்லைகளுடன் :————

13. விண்ணப்பிப்பவர் வாசிக்கவும், எழுதவும் கூடிய மற்றைய தேசிய மொழிகள் :————

14. தட்டச்சில் பொறிக்கும் ஆற்றல் : எம்மொழியில் அல்லது மொழிகளில் :————

15. நீர்—

(i) அரசாங்க சேவையிலிருந்து தள்ளப்பட்டீரா அல்லது நிறுத்தப்பட்டீரா ? :————

(ii) நீதி மன்றத்தில் குற்றங்கள் காணப்பட்டீரா ? :————

(iii) அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகினீரா ? :————

16. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுக்கும் மூவரின் பெயர்களும், அவர்களைப் பற்றிய விபரங்களும் :————

17. விண்ணப்பவரின் நேர்மையைப்பற்றி சொந்த அனுபவத்திலிருந்து கூறும் மூன்று நடுவர்களின் பெயர்களும் அவர்களின் முகவரிகளும் :————

18. வேறு கோரிக்கைகள் :————

————
விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

திகதி :————

2-752—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பரிசோதனைச்சாலையில் சிற்பசாலை முகாரிக்கான பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பரிசோதனைச்சாலையில் சிற்பசாலை முகாரிக்கான ஓர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ் தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நீர்ப்பாசன அதிபர் த. பெ. 1138, கொழும்பு 7 " என்ற முகவரிக்கு 1969 மார்ச் மாதம் 14 ந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாயனுப்பிவைத்தல் வேண்டும். மனுப்பத்திரங்கள் கிடைத்தற்கான ஒப்புக்கொள்ளுதல் அறிவிக்கப்படமாட்டாது.

2. **தொழிலின் நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளமுடையதுமாகும். விதவையர் அனாதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்துதல் வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—ஆண்டொன்றுக்கு ரூபா 1,860 முதல் ரூபா 3,780 வரை ரூபா 120 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 16 உம், ரூபா 2,820 க்குமுன் வினைத்திறமைகாண் தடையுமுண்டு.

**குறிப்பு** :— ரூபா 2,820 ல் வினைத்திறமைகாண் தடையைக் கடப்பதற்கு முன், வாய்மொழி தமிழ் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். பரீட்சையின் தரம் நிர். பிர. 137 ல் குறிப்பிடப்பட்டிருக்கும் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையின் தரத்தையுடையது.

4. **வேண்டிய தகைமைகள்** :— ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று, அவர்—

(1) ஒரு இலங்கையராயிருத்தல் வேண்டும். (ஒரு " இலங்கையர் " என்பது பரம்பரை அல்லது பதிவு இலங்கைக் குடியானவர்).

(2) 1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ந் திகதியன்று 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

(3) மாசற்ற நற்குணமுடையவராயும் உடல் நலம் வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும்.

(4) கீழ்க்காணும் அறிவுத் தகைமைகளும் தேவையான அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) (1) கணிதம், பௌதிகவியலுடன் சி. ப்ா. த. பத்திரம் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாவண்ணம், சிங்கள/தமிழ் மொழி, கணிதம், பௌதிகவியல் ஆகியன உட்பட ஒரே தடவையில் ஐந்து பாடங்களுக்குக் குறையாத பொ. க. த. பத்திர (சாதாரண தர)த் துடனும்,

(2) நன்கு மதிக்கப்பட்ட பொறியியல் ஸ்தாபனத்தின் சிற்பசாலை வேலைப்பயிற்சியில் மூன்று வருட அனுபவமுமுடையவராயிருத்தல் வேண்டும். பயிற்சிக்காலத் தவணை 5 வருடங்களும், இவ்வைந்து வருடப் பயிற்சிக் காலம் 3 வருட தொழில் அனுபவம் பெறுவதற்கு முன்னம் இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) (1) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் அல்லது மின்வியல் அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் பெற்ற அறிவுப்பத்திரமும்; (2) நன்கு மதிக்கப்பட்ட பொறியியல் ஸ்தாபனத்தின் சிற்பசாலை வேலைப்பயிற்சியில் இரு வருட அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

பயிற்சிக்காலத் தவணை 5 வருடங்களும், இவ்வைந்து வருடப் பயிற்சிக்காலம் 2 வருட தொழில் அனுபவம் பெறுவதற்கு முன்னம் இருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) (1) க. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமானதுடன்

(2) நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கைதேர்ந்த 1 ந் தர தொழில் உடையவராய் சிற்பசாலைத் தொழிற் பயிற்சியில் 10 வருட அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும். நீரியலிலும் மற்றும் மாதிரிகளிலும் பகுதிகளை இயற்றக்கூடிய அனுபவம் வாய்ந்திருத்தல் வேண்டும்.

5. அரசாங்க சேவையிலிருப்போர் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

6. விண்ணப்பத்தாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூல சான்றிதழ்களை அல்ல) இணைத்தல் வேண்டும். இவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

(அ) பெற்றுள்ள கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(ஆ) நன்கு மதிக்கப்பட்ட பொறியியல் ஸ்தாபனத்தின் பயிற்சிக்காலத்திற்கும், சிற்பசாலையில் தொழிற் பயிற்சி அனுபவத்திற்கும் பெற்றுள்ள சான்றிதழ்கள்.

(இ) சமீபத்தில் பெற்றுள்ள மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (இதில் ஒன்று கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளதாயிருத்தல் வேண்டும்).

(ஈ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

**குறிப்பு** :—சமைய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்பத்தாரரின் பிறப்பு பதிவு செய்யப்படாதிருக்குமாயின் வயதைக் கணிக்கும் பொருட்டு றெஜிஸ்ரார் ஜெனரலால் வழங்கப்படும் விசேஷ வயதுச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியினால் நிர்ணயிக்கப்படும் தொகையை பிணைப்பணமாகச் செலுத்தும்படி உத்தியோகத்தர் கோரப்படுவர்.

8. அரசாங்க சேவையில் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் அரசாங்க வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

ரீ. பத்மநாதன்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
த. பெ. 1138,
கொழும்பு 7, 6 பெப்ரவரி 1969.

## விண்ணப்ப மாதிரிப் படிவம்

### நீர்ப்பாசனத் திணைக்களப் பரிசோதனைச் சாலையில் சிற்பசாலை முகாரிக்கான பதவி

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :————— .
2. அஞ்சல் முகவரி :—————.
3. (அ) விண்ணப்பதாரரின் பிறந்த திகதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கவும்).

   (ஆ) பிறந்த இடம் :—————.

   (I) விண்ணப்பதாரரின் தந்தையார் :—————.

   (II) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டனார் :—————.

   (III) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் முப்பாட்டனார் :—————.

(விண்ணப்பத்தாரர் இலங்கையில் பிறந்திருந்தால் (ஆ) (I) அல்லது (II) ம் (III) ம் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தாரர் இலங்கையில் பிறவாதிருந்தால் (ஆ) (I) ம் (II) ம் அல்லது (III) நிரப்பப்படல் வேண்டும்.

4. தேசிய இனம் :—————.
5. விண்ணப்பத்தாரர் விவாகமானவரா, தனித்தவரா அல்லது தாரமிழந்தவரா :—————.
6. சித்தியெய்தியுள்ள பாடங்களுடன் கல்வித் தகைமைகள் :—————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்)
7. அறிவுத் தகைமைப் பத்திரம் :—————.
8. சிற்பசாலையின் அனுபவமும் பயிற்சிக்காலத் தவணையுமடங்கிய விபரங்கள் :—————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்)
9. தற்பொழுது பதவி (நிரந்தரமானதா தற்காலிகமானதா என்பதை குறிப்பிடவும்) :—————.
10. நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்கியவர்கள்.

    (I) —————.

    (II) —————.

    (III) —————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இதில் காணப்படும் விபரங்களில் ஏதேனும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும், நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

—————,
விண்ணப்பத்தாரரின் கையொப்பம்.

இடம் :—————.
திகதி :—————.

2-569—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வயலின் வாசிப்பவர் பதவி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் வாத்தியக் கோஷ்டியில் வயலின் வாசிப்பதற்கு அனுபவம் வாய்ந்த வித்வான்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இசைப் பரிசோதனையில் சித்தி பெறுதவர்களும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைக் கலைஞர்களுள் "பி" பிரிவுக்குக் குறைந்த தரத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. தற்போதுள்ள வாத்தியக் கோஷ்டி அங்கத்தினர்கள் விண்ணப்பிக்கலாம்.

3. விண்ணப்பத்தாரர் கர்நாடக இசையில் விற்பன்னராயும், மெல்லிசை வாசிக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அவர் இந்திய முறைப்படி ஸ்வரப்படுத்தி எழுதுவதினும், ஸ்வரப்படுத்தி எழுதியதை வாசிப்பதினும் இராகங்களிலும் சிறந்த ஞானம் பெற்றிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வாத்தியங்களை வாசிக்கும் திறமை மேலதிக யோக்கிய தாம்சமாகக் கருதப்படும், அங்கிகாரம் பெற்ற இந்திய இசைக் கல்லூரியில் தாராதரப் பத்திரம் பெற்றிருப்பின் விசேஷ கவனம் செலுத்தப்படும். தாங்கள் தேர்ந்தெடுக்கும் இசைக் கருவி மாத்திரமன்றி, தாங்கள் வாசிக்கத் தகுதியுள்ள மற்ற இசைக்கருவிகளையும் வாத்தியக்கோஷ்டித் தலைவர் விரும்பும் பொழுது வாசிக்க வேண்டுமென வாத்தியக்கோஷ்டி அங்கத்தினர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

4. அங்கத்தினர் இரண்டுவருடகால ஒப்பந்தத்தில் முதலில் நியமனம் பெறுவார். ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, இந் நியமனம் மீண்டும் புதுப்பிக்கப்படலாம். குறிப்பிட்ட தொகை மாதச் சம்பளமாக வழங்கபடும். மேலதிகமான பணம் எதுவும் கிடையாது. ஒப்பந்த ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு மாத அறிவித்தல் கொடுப்பதன் மூலம் வேலையிலிருந்து விலகவோ விலக்கவோ முடியும். வாத்தியகோஷ்டி அங்கத்தவர் வாரமொன்றுக்கு சராசரி 48 மணிநேரத்துக்குக் குறையாமல் வேலைசெய்ய வேண்டும்.

5. அங்கத்தவருக்கு ரூபா 200 முதல் ரூபா 300 வரை ஊதியமாக வழங்கப்படும். யோக்கியதாம்சமும், அனுபவமும் உள்ளவர்களுக்கு, இந்த அளவுக்குட்பட்ட ஒரு தொகை சம்பளமாக நிர்ணயிக்கப்படலாம்.

6. விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள பத்திரத்தில் நிரப்பப்பட்டு, 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8 ஆம் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக ஒலிபரப்பு மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு—7, என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடதுபுற மேல் மூலையில் "வயலின் வாசிப்பவர்" என்று குறிப்பிட வேண்டும்.

என். டி. ஜெயவீர,
ஒலிபரப்பு மா அதிகாரி.

1969 மாசி 12.

#### வயலின் வாசிப்பவர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :—————
   (தனி எழுத்துக்களில் எழுதுக)
2. விலாசம் :—————
   (தனி எழுத்துக்களில் எழுதுக)
3. (அ) 8.3.69 ல் விண்ணப்பிப்பவரின் சரியான வயது : வருடம் . . . . . . . . . . மாதம் . . . . . . . . . . . . . . . . . திகதி . . . . . . . . . .

   (ஆ) விண்ணப்பிப்போர் பிறந்த திகதி :—————.
   (பிறப்பு, சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. சாதியம் :

   (1) வம்சாவளி இலங்கையரா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கையரா ?

   (2) வம்சாவளி இலங்கையராயின் பின்வருவோர் பிறந்த இடம் :—————

   (அ) விண்ணப்பிப்பவர் :—————

   (ஆ) விண்ணப்பிப்பவரின் தகப்பன் :—————

   (இ) விண்ணப்பிப்பவரின் தகப்பன் வழிப் பாட்டன் :—————.

   (ஈ) விண்ணப்பிப்பவரின் தகப்பன் வழிப் பூட்டன் :—————.
5. கல்வித் தகைமைகள் :—————.
6. இசை, வாத்தியமிசைத்தல் என்பவற்றில் தகைமைகள், அனுபவங்கள் :—————

—————,
விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

திகதி :—————.

2-769—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

## படிப்பு விடுதலைக்கு மருத்துவ உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்—1968–69

**கல்லூரி அமர்வுக் காலங்கள்**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள (1), (2) ஆம் நிரல்களில் காட்டப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கும், சிறப்புத்துறைகளில் பயிற்சி பெறுவதற்கும் படிப்பு விடுதலை வழங்குவதற்கு, சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்களும், 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆந் திகதியில் 40 வயதுக்குட்பட்டவர்களுமான II ஆந் தர மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் கீழே உள்ள (3) ஆம் நிரலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளை உடையவர்களாக இருப்பதுடன், ஒன்றில்

(i) ஏலவே உடையவர்களாக, அல்லது

(ii) 1969 ஒக்ரோபர் 1 ஆந் திகதிக்கு முன்னதாக இத்தகைமைகளை உடையவர்களாக இருக்கக்கூடிய நிலையிலிருத்தல் வேண்டும்.

| (1) சிறப்புத்துறை | (2) தகைமைகள் | (3) தேவைகள் | (4) புலமைப் பரிசிலுக்குரிய கால எல்லை |
|---|---|---|---|
| (1) பொதுவான மருத்துவம் .. | எம்.ஆர்.சி.பி. (இலண்டன்) அல்லது (எடின்) | எம். டி. உடைய உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் | 2 ஆண்டுகள் |
| (2) பொதுவான அறுவை வைத்தியம் | எவ்.ஆர்.சி.எஸ். (இங்கிலாந்து) அல்லது (எடின்) | ஆரம்ப எவ்.ஆர்.சி.எஸ். அதனுடன் 2 வருட முழுநேர அறுவை வைத்தியப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவராயிருத்தல் வேண்டும் | 2 ஆண்டுகள் |
| (3) மயக்க மருந்தியல் .. | எவ்.எவ்.ஏ.ஆர்.சி.எஸ். .. | ஆரம்ப எவ்.எவ்.ஏ.ஆர்.சி.எஸ். மயக்க மருந்தியலைத் தவிர்ந்த ஏனையவற்றில் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய சாலைகளில் 12 மாதங்களுக்கு பிணியாய் நிலையச் சிகிச்சை செய்தவர்களும், அங்கீகரிக்கப்பட்ட வைத்திய சாலைகளில் 18 மாதங்களுக்கு முழுநேர மயக்க மருந்தியல் சார்ந்த சிகிச்சை செய்தவர்களுமாயிருத்தல் வேண்டும் | 2 ஆண்டுகள் |
| (4) பிரசவ வைத்தியமும் பெண் நோயியலும் | (அ) பிரசவ வைத்தியத்திலும், பெண் நோயியலிலும் (எடின்) எவ்.ஆர்.சி.எஸ். | (அ) வுக்கு—ஆரம்ப எவ்.ஆர்.சி.எஸ். அதனுடன் பிரசவ வைத்தியத்திலும், பெண் நோயியலிலும் ஒரு வருடம் தங்கியிருந்து சிகிச்சை செய்தலும் | 2 ஆண்டுகள் |
| | (ஆ) எம்.ஆர்.சி.ஓ.ஜீ. (பெரிய பிரித்தானியா) | (ஆ) (i) 12 மாதங்கள் பதிவுக்கு முன்னதான சிகிச்சைகள்<br>(ii) 6 மாதங்கள் பொதுவான அறுவை வைத்தியச் சிகிச்சைகள்<br>(iii) 12 மாதங்கள் பிரசவ வைத்தியச் சிகிச்சைகள்<br>(iv) 12 மாதங்கள் பெண் நோயியல் சிகிச்சைகள் | 2 ஆண்டுகள் |
| (5) குழந்தை வைத்தியம் .. | எம்.ஆர்.சி.பி. (எடின்) அல்லது (இலண்டன்) | குழந்தை வைத்தியத்தில் 2 வருடங்கள் தங்கியிருந்து சிகிச்சை செய்தல் | 2 ஆண்டுகள் |
| (6) காது, மூக்குத் தொண்டை வைத்தியம் | செவி குரல்வளை நோயியல் எவ்.ஆர்.சி.எஸ். (இங்கிலாந்து) அல்லது எவ்.ஆர்.சி.எஸ். (எடின்) + டி.எல்.ஓ. (இலண்டன்) | ஆரம்ப எவ்.ஆர்.சி.எஸ். அதனுடன் கா.மூ.தொ. வைத்தியத்தில் ஒரு வருட வேலை | 2 ஆண்டுகள் |
| (7) கண் மருத்துவவியல் .. | கண் மருத்துவவியலில் எவ்.ஆர்.சி.எஸ். (இங்கிலாந்து) | ஆரம்ப எவ்.ஆர்.சி.எஸ். ..<br>(i) பொதுவான மருத்துவத்தில் 6 மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சை செய்தல்<br>(ii) மருத்துவம் சம்பந்தமான விடயத்தில் 6 மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சை செய்தல்<br>(iii) கண் மருத்துவவியல் 1 வருடம் தங்கியிருந்து சிகிச்சை செய்தல் | 2 ஆண்டுகள் |
| (8) உடல் சார்ந்த மருத்துவம் .. | டி. உடல்சார்ந்த மருத்துவம் .. | (i) அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலையொன்றில் 12 மாதங்கள் தங்கியிருந்து சிகிச்சை செய்தல்<br>(ii) அங்கீகரிக்கப்பட்ட உடல் சார்ந்த மருத்துவத் துறையில் 2 கல்லூரி வருடங்கள் முழுநேரப் பயிற்சி | 2 ஆண்டுகள் |
| (9) கதிர்வீச்சியல் .. | டி.எம்.ஆர்.டி. .. | (i) (பொதுவான மருத்துவம்) விடுதி வைத்தியராக அல்லது (பொதுவான அறுவை வைத்தியம்) விடுதி வைத்தியராக இருப்பதுடன் (கதிர்வீச்சியல் தவிர்ந்த) 12 மாதங்கள் தங்கியிருந்து அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைச் சிகிச்சைகள், அதனுடன்<br>(ii) கதிர்வீச்சியலில் 2 வருடங்கள் வேலை | 2 ஆண்டுகள் |
| (10) சட்டஞ் சார்ந்த மருத்துவம் | (அ) டி.எம்.ஜே. (இலண்டன்) .. | (அ) சட்டஞ் சார்ந்த மருத்துவத்தில் 2 வருட வேலை .. | 1 ஆண்டு |
| | (ஆ) டி.எம்.ஜே. (இலண்டன்) .. | (ஆ) எம்.டி. .. | 1 ஆண்டு |
| | (இ) சட்டஞ் சார்ந்த மருத்துவத்தில் (எடின்) எம்.ஆர்.சி.பி. | (இ) சட்டஞ் சார்ந்த மருத்துவத்தில் 2 வருட வேலை .. | 2 ஆண்டுகள் |

2. குறித்த சிறப்புத்துறையொன்றுக்குப் படிப்பு விடுதலை வழங்கத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஒருவர் அதன் பின்னர் வேறொரு சிறப்புத் துறையில் படிப்பு நெறிக்கு மாற அனுமதிக்கப்படமாட்டார். மேலும், படிப்பு விடுதலை முடிவுற்றுத் திரும்பிய பின்னர் அச்சிறப்புத் துறையிலேயே புறநீங்கலாகத் தொழில் பார்க்க வேண்டப்படுவர். சிறப்பறிஞர்களாக அவர்கள் நியமனம் பெறுதல், சிறப்பறிஞர்களின் ஊழியர் கோப்பிலிருக்கும் வெற்றிடங்களில் தங்கியிருக்கும். சிறப்பறிஞர்களின் ஊழியர் கோப்பில் வெற்றிடங்களேற்படும்வரை இத்தகைமைகளைப் பெறும் உத்தியோகத்தர் தொடர்ந்தும், தர மருத்துவ உத்தியோகத்தர்களாக நடாத்தப்படுவர். சிறப்பறிஞர்களுக்குரிய படிகளுக்கு அவர்கள் உரித்துடைய ராகார்.

படிப்பு விடுதலை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பின்வரும் சலுகைகள் வழங்கப்படும் :—

(i) குறித்த காலத்துக்கு முழுச் சம்பளம் ;

(ii) அரசாங்க செலவில் இங்கிலாந்துக்குப் போகவும் வரவும் பயணச் செலவு ;

(iii) (சொந்தப் படிப்புக் கட்டணங்கள் தவிர) உத்தியோகத்தர் சித்திபெறும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பு நெறிகள், பயிற்சி, பரீட்சைகள் ஆகியவற்றின் கட்டணங்கள் யாவற்றையும் மீள நிரப்பல் ;

(iv) 276 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தின் நியதிப்படி கொடுக்கப்பாலனவான, தீவைவிட்டு வெளியே இருக்க வேண்டிய காலத்திற்குரிய படிகள்.

3. உத்தியோகத்தர்கள் பின்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தமொன்றுக்கு உடன்படுமாறு வேண்டப்படுவர் :—

(i) குறித்த காலத்திற்குள் குறித்த தகைமைகளைப் பெறுவதற்கு ;

(ii) தீவிற்குத் திரும்பிய பின்னர் 15 வருடங்களுக்கு அரசாங்கத்தில் சேவை செய்வதற்கு (பதவியிலிருந்து நீக்கப்படல் சேவையில் தொடர்ந்திருக்கத் தவறியதாகக் கருதப்படும்) ;

(iii) சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபடாதிருப்பதற்கும் முழுநேர உத்தியோகத்தராகக் கடமை செய்வதற்கும் ;

(iv) இந்த ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றத் தவறும் வேளையில் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப் படும் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஆளாவார்.

4. பல்வேறு பயிற்சி நிலையங்களில் இடவசதியும் இடங்களும் ஏற்பாடு செய்தல் திணைக்களத்தின் பெருமுயற்சியாயிருக்கும். ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கைத் தூதுவர் மூலம் ஒழுங்குகள் செய்யப்படும் பொருட்டுத் தங்களது தேவைகள் பற்றித் தெரிவு செய்யப்படும் உத்தி யோகத்தர்கள் எனக்கு அறிவிக்குமாறு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

5. உத்தியோகத்தர்கள், தங்களது விண்ணப்பங்களை 1969 மார்ச் மாதம் 19 ஆந் திகதிக்குப் பிந்தாமல் இவ்வலுவலகத்தில் கிடைக்கும்படியாக பதிவஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். தங்களது விண்ணப்பங்களை விசேடமாகக் கருதப்படுவதற்குரிய காரணங்கள் எவையேனு மிருப்பின் அவற்றை அதில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கூடியவரை தாமாக விளக்கந்தரும் தன்மையுள்ளனவாகவும், நீக்கப்பட்ட தெனக்கருதப்படும் முந்திய விண்ணப்பங்கள் தொடர்பாகவோ அல்லது அதன் தொடர்ச்சியாகவோ இருத்தலும் கூடாது. ஒன்றிற்கு மேற்பட்ட சிறப்புத்துறைகளுக்கு உத்தியோகத்தர்கள் விண்ணப்பஞ் செய்யின் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

டி. பி. குணசேகரா,
சௌக்கிய சேவைப் பணிப்பாளர்.

சௌக்கிய சேவை பணிப்பாளரின் அலுவலகம், கொழும்பு,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 7 ந உ.

2-583—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## இலங்கை தொண்டர் படையில் படையினர் ஆளின்மைக்கு ஆள்திரட்டல்

1. இலங்கை தொண்டர் படையில் கீழ்க்காணும் படையில் படையினர் நிலையில் வெற்றிடங்கள் இருக்கின்றன.

**இலங்கை இராணுவ வைத்தியச் சிறப்பணி (தொடர்)**

2. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ந திகதியன்று 18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும்;

(இ) படைத்தளபதியினால் விதிக்கப்பட்ட வைத்தியப் பரிசோதனை யில் சித்தியடைதல் வேண்டும் ;

(ஈ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது கூடிய கல்வித்தகைமைகளுடன் விஞ்ஞான பாடங்களுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கீழ்க்காணும் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங் கப்படும் :—

பொது நல்வழிப் பரிசோதகர்கள்

உதவி வைத்திய செய்கைமுறைப் பரீட்சையாளர்கள் (மருந்து விற்பவர்கள்)

ஆண் செவிலித்தாய்கள்

பரிசோதனைச்சாலை தொழில்நுட்பதாரிகள்

மருத்துவச்சாலையாளர்கள்

மருத்துவச்சாலை எழுதுவினைஞர்கள்/பண்டசாலையாளர்கள்/ மேற்பார்வையாளர்கள்

படைத்தளபதி தன் விருப்புரிமைக்கிணங்க 2 (ஆ) பிரிவில் கேட்கப்பட்ட வயதெல்லையைக் கூட்டியோ குறைந்தோ தீர்மானிக்கலாம்.

குறிப்பு.—1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழி யதிகாரச்சட்டத்துக்கு இணங்கி நடக்குமாறு வேண்டப்படுவர்.

3. இயல்பான நேரங்களில் ஒரு இலங்கை தொண்டர் படையில் போர்வீரர் ஒருவர் குறிக்கப்பட்ட பயிற்சி படைஅணிவகுப்புகளுக்கும் வருடத்தில் 14 நாட்கள் கொண்ட பயிற்சிக்கு மடருக்கும் தோற்றுமாறு வேண்டப்படுவர்.

4. இலங்கை தொண்டர் படையில் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இலங்கைத் தொண்டர் படையில் போர்வீரர் ஒருவருக்கு குறிக்கப்பட்ட ஊதியத்துக்காக தம்மால் செலவிடப்படும் செலவுகள் கொடுக்கப்படும்.

5. பொது நியதிகள் தரைப்படை அதிகாரச்சட்டத்திலும் இலங்கை தொண்டர் படையில் ஒழுங்கு விதிகளுக்கும் அமைந்ததாகும். ஒரு தொண்டர் திரட்டப்பட்ட நேரத்தில் அவரின் கடமை தரைப்படை அதிகாரச்சட்டத்தின் 357 ஆம் அத்தியாயம் 7 ஆம் 19 ஆம் பிரிவின் நியதியின் படியாகும். சேவைக்காக திரட்டப்பட்ட நேரங்களில் இலங்கை தொண்டர் படையில் அங்கத்தவர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் சம்பள மும் சகாயப் பணமும் நிரந்தரப் படையின் படையினருக்குப் போன்றது போலாகும்.

6. இக்காலி ஸ்தானங்கள் இலங்கை தொண்டர் படைக்கேயாகும் அன்றி நிரந்தரப்படைக்கல்ல என்றும் தெரிந்தெடுக்கப்படுவது நிரந்தர தொழில் அமைப்புக்கு அல்ல என்பதையும் வற்புறுத்தப்படுகிறது.

7. விண்ணப்பங்கள் குறைந்தபட்சம் இரு நற்சான்றுப்பத்திரங்களுடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும். அவை கடந்த இரண்டு வருடங் களுக்குள் தகுதிவாய்ந்தவர்களினால் கொடுக்கப்பட்டதும் விண்ணப்பகார ருக்கு நன்கு அறிமுகமுடையவர்களிடமிருந்து பெற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.

8. கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களில் இருந்து மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பகாரர்களை தொடர்வுத்தேர்தல் ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படும். இதன் பின் தேர்தல் சபை ஒன்றினால் நேர்முகப்பரீட்சை மூலம் கடைசித்தேர்தல் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரருக்கு எழுத்துமூலம் திகதி, நேரம், இடம் என்பன அறிவிக்கப்படும். இத்தொடர்பில் ஏற்படும் பிரயாணச்செலவோ அல்லது பிறசெலவுகளோ இலங்கை அரசாங்கத் தினால் கொடுக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப் படாத விண்ணப்பகாரருக்கு அவைபற்றி அறிவிக்கப்படும்.

9. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்பவும், அவை இராணுவ தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 3, என முகவரியிடப்பட்டும் விண்ணப்பப்படிவத்திலும் அவற்றை அனுப்பும் உறையின் மேல் இடப்பகுதியிலும் " விண்ணப்பங்கள்—இஇவைப—(தொ)—பிரவரிசையினர் " என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி பி. ப. 4.30 மணிக்கு முன்னதாய் இராணுவ தலைமை நிலையத்தில் சேரவேண்டும்.

**குறிப்பு** :— (i) விண்ணப்பப் படிவங்கள் இத் தலைமை நிலையத்தில் வழங்கப்படமாட்டாது.

(ii) இவ்விண்ணப்பப்பத்திரத்தின் தேவைப்படுவதற்கு இணங்காத விண்ணப்பங்கள் யாவும் தள்ளுபடி செய்யப்படும்.

எம். எல். டி. எ. பெரேரா,
கர்ணல்,
மேஜர்—ஜெனரால்,
இராணுவத் தளபதிக்காக.

இராணுவ தலைமை நிலையம்,
தபால் பெட்டி இல. 553,
பாலதக்ச மாவத்தை,
கொழும்பு 3,
12 பெப்புருவரி மாதம், 1969.

**இலங்கை தொண்டர் படையில் சேருவதற்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.

2. முகவரி : ————.

3. அருகாமையிலுள்ள தபால்/தந்தி நிலையம் : ————.

4. அருகாமையிலுள்ள பொலிசு நிலையம் : ————.

5. பிறந்த திகதி : ————
வயது : ————.
(பிறப்புச் சான்றுப் பத்திரத்தின் பிரதியொன்று இணைத்திருத்தல் வேண்டும்)

6. தேசிய இனம் : ————.

7. இராணுவ (கடற்படை, ஆகாயப்படை, தொண்டர் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால், பிரிவு, தகுதிகள் ஆகியவற்றை விபரங்களுடன் தருக : ————.

8. இராணுவத்தில் இருந்து விலகிய பொழுது உமது நடத்தை : ———
(விலகும்போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்).

9. சித்தியடைந்துள்ள கூடுதலான கல்வித் தராதரம் : ————.
பாடங்களும் திகதியும் காட்டுக : ————.
(சான்றுப்பத்திரங்களின் பிரதி இணைத்தல் வேண்டும்)

10. வேறு தகுதிகள் இருப்பின் (விளையாட்டு சம்பந்தப்பட்டவையுட்பட) : ————.

11. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகியபின் செய்த தொழில் : ————.

12. தற்போது தொழில் செய்யும் இடத்தில் பெயரும் முகவரியும் : ————.
(தற்போது தொழில் செய்யும் திணைக்களத்தலைவரிடமிருந்து இலங்கை தொண்டர் படையில் சேருவதற்கு தம் சம்மதத்தைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்று இணைத்தல் வேண்டும்)

13. உயரம் :————அடி————அங்குலம்.

14. நற்சான்றுப்பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் : ————.

15. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தவேண்டிய உறுதி : ————.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்று உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

**2–628—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842**

---

## ஆயுள்வேத திணைக்களம்

**வரையறுக்கப்பட்ட தாதிமார் பதவிகள்**
**(நாளாந்த வேதனம்)**

ஆயுள்வேதத் திணைக்களத்திலிருந்து வரையறுக்கப்பட்ட தாதிமார் பதவிகளுக்கான (நாளாந்த வேதனம்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரியினைப்போல் தயார்செய்து 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. **வேதனம்**.—நாளொன்றுக்கு ரூபா 6 வீதமுடன், வாழ்க்கைப் படியும், விசேட வாழ்க்கைப்படியுடனும், இடைக் காலப் படியும் வழங்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.—பதவிகள் நாளாந்த வேதனத்துக்குரியனவாகும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் எந்த நேரத்திலும் முன்னறிவித்தலின்றி வேலையிலிருந்து நீக்கப்படலாம்.

4. **தேவையான தகைமைகள்**.—ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தேவையான தகைமைகள் உடையவரென நிரூபிக்க வேண்டும், அவர்—

(i) 5.3.1969 ல் 18 வயதிற்குக் குறையாதவராயும், 45 வயதிற்கு மேற்படாதவராயும்,

(ii) தகுதி வாய்ந்த தாதியாக இலங்கை வைத்திய சபையில் 1949 ம் ஆண்டு 10 ம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவராயும், வைத்திய இலாகாவினால் தாதிமார் தேர்ச்சிப் பத்திரம் அளிக்கப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். தாதிமார் தேர்ச்சிப் பத்திரத்துடன், மருத்துவத் தேர்ச்சிப் பத்திரம் பெற்றவர்களுக்குச் சலுகையளிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம். (ஞானஸ்நானப் பத்திரமோ அல்லது கல்வி சம்பந்தமாக அளிக்கப்பட்ட பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) அண்மையில் பெறப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள். (பிரதிகள்).

(இ) கல்வி சம்பந்தமானதும், மேலதிக கல்வி சம்பந்தமான பத்திரம். (பிரதிகள்).

6. விண்ணப்பங்கள், ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேதத் திணைக்களம், கொழும்பு 8 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தில் கடமை புரியும் எந்த ஊழியரினதும் விலாசத்திற்கு அனுப்பக் கூடாது.

7. இப்பதவிகள் சம்பந்தமான பொது நிபந்தனைகள், இந்த வர்த்தமானியின் முதலாம் பகுதியில் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.—விண்ணப்பத்துடன் அனுப்பப்படும் எந்தப் பத்திரங்களும் திருப்பி அனுப்பப்படமாட்டாது. மேலே கூறிய தகைமைகளுக்கமையாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், இது சம்பந்தமான விசாரணைகள் நடத்துவதற்குப் பதில்கள் அனுப்பப்படமாட்டாது.

விமல் நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத இலாகா,
கொழும்பு 8,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 10 ந் வ.

### விண்ணப்ப மாதிரிப் படிவம்

**வரையறுக்கப்பட்ட தாதிமார் பதவிகள்**
**(நாளாந்த வேதனம்)**

1. முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும், 5.3.69 ல் வயதும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4. தேசிய இனம் :————.

5. திருமணமானவரா அல்லது தனிப்பட்டவரா :————.
திருமணம் செய்தவராயின், பின்வருவனவற்றைக் குறிப்பிடுக :—
(அ) கணவரின் பெயர் :————.
(ஆ) கணவர் இருக்கின்றாரா :————.
(இ) (i) கணவருடன் வசிப்பவரா :————.
(ii) சட்டபூர்வமாகப் பிரிந்திருக்கிறதா :————
(iii) இல்லையேல் :————.

(iv) கணவரின் தொழில் :————.
(v) அவர் கடமைபுரியும் இடம் :————.
(vi) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.
(அ) முதற் பிள்ளையின் வயது :————.
(ஆ) கடைசிப் பிள்ளையின் வயது :

6. தற்போது பதவியில் இருப்பின் :—
(அ) தற்போதைய ஸ்தானம் :————.
(ஆ) கடமை புரிந்த வருடங்கள் :————.

7. கல்வி கற்ற இடமும், சித்தியடைந்த பரீட்சைகளும் :————.

8. தாதிப் பயிற்சி பெற்ற இடம் :————.

9. மருத்துவப் பயிற்சி பெற்றவரா :————.
(பத்திரத்தின் பிரதி இணைத்தல் வேண்டும்)

10. அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றுப் பத்திரங்கள் :————.

11. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும், விலாசமும் :————.

12. பின்வரும் மொழிகளில் உள்ள அறிவு :—

| | வாசித்தல் | எழுதுதல் | கதைத்தல் |
|---|---|---|---|
| சிங்களம் .. | ———— | ———— | ———— |
| தமிழ் .. | ———— | ———— | ———— |
| ஆங்கிலம் .. | ———— | ———— | ———— |

13. அரசாங்கத்தின் கீழ் முன்பு சேவை புரிந்திருந்தால், அவை பற்றிய விபரங்கள் :————.

14. தாதியாகப் பதிவு செய்யப்பட்ட பதிவு இலக்கம் :————.
(பிரதி இணைத்தல் வேண்டும்)

இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் சரியானதென்றும், நான் எப்போதாவது அரசாங்கத்திலிருந்தோ அல்லது வேறு நிலையத்திலோ திறமையற்றதற்கு ஓய்வு பெறப்பட்டோ அல்லது வேலை நீக்கம் செய்யப்பட்டோ அல்லது நீதிமன்றத்தில் குற்றப்படவில்லையென்றும் உறுதி கூறுகிறேன். தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையற்றது எனக் கண்டு பிடிக்கப்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என உறுதிப் படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-612—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி—இயந்திரத் தொழிலாளன், 2 ம் வகுப்பு

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி, 1969 ம் ஆண்டு பெப்புரவரி மாதம் 7 ம் திகதி வெளியான 14,840 ம் இலக்க அரசினர் வர்த்தமானியின் வெளியிடப்பட்ட அறிவித்தலின் 3 ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

3. சம்பளமும் சகாயப்படிகளும் .—

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகர சபை எல்லையிலிருந்து 5 மைல் சுற்றுடலுக்குள்ளும் அல்லது எந்திரவியல் நிலையமாக திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு —

முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூபா 2.30 வீதமும் பின்னர் ரூபா 750—42 × 13—ரூபா 1,296 வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படாதவையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு —

முதல் ஆறு மாத காலத்திற்கு நாளொன்றுக்கு ரூபா 2.10 வீதமும் பின்னர் ரூபா 750—42 × 13—ரூபா 1,296 வருடாந்தம்.

டீ. ஜீ. தயாரத்ன,
மகா வித்தியாதிபதி.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
14.2.1969.

2-753—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## தேசீய நூதனசாலைகள் பகுதி

### நூல்நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவி

தேசீய நூதனசாலைகள் பகுதியிலுள்ள நூல்நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் விதிக்கப்பட்ட மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக “ தேசீய நூதனசாலைகள் அதிபதி, தேசீய நூதனசாலைகள் பகுதி, கொழும்பு 7 ” என்ற விலாசத்துக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ நூல்நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் ” எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 1,320—19 × 72—ரூ. 2,688 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 1,608 பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகள்.**—(அ) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். ஆண் அபேட்சகர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதித் திட்டத்துக்கு அவர் கட்டணம் செலுத்த வேண்டும். பெண் அபேட்சகர் ஒருவர் தெரிவு செய்யப்படின் அவர் 29.4.57 ஆந் திகதிய 372 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தில் கொடுபட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க சேவை சேமலாப நிதி அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ஆ) நியமனம் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தேவைகளைத் திருப்திகரமாக நிரூபிப்பதாகச் சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் ;

**குறிப்பு.**—எனினும், இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது.

(ஆ) லண்டன் அல்லது இலங்கை க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி ஒரே தடவையில் 3 பாடங்களில் அல்லது இரு தடவைகளில் தோற்றி 4 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(இ) சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளினும் இயற்கை விஞ்ஞான பாடம் எதிலேனும் அல்லது கீழைத்தேய மொழி எதிலேனும் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—சி. பா. த. பத்திரம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் நூல்நிலைய வேலையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்கும் இப்பகுதிப் பணியாளர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஈ) சிறந்த ஒழுக்கம் உடைய்வராய் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் படிவங்களையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்:—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. : ஞானஸ்நானப் பத்திரம் அல்லது கல்வி நோக்கங்களுக்காக வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலிருந்து எடுக்கப்படும் பகுதி இந்நோக்கத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் தொழிற் தராதரப் பத்திரமும் ;

(இ) அபேட்சகரின் ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான தகுதி ஆகியவை பற்றி சமீப காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட 3 நற்சாட்சிப் பத்திரங்கள் (எனினும், ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வேற்பாடு அமையாது).

6. அரசினர் சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் உரிய பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து, இப்பதவிக்கு நியமிக்கப்படும் பொருட்டு சேவையிலிருந்து அவரை உடனடியாக விடலாம் என உறுதியளிக்கும் அத்தாட்சிப் பத்திரம் ஒன்று சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரால் அத்தகைய விண்ணப்பப் படிவங்களுடன் இணைக்கப் பட வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான உரிய சாதனங்களும் தேசிய நூதன சாலைகள் பகுதி அதிபதிக்கே அனுப்பப்பட வேண்டும். இவை இப்பகுதியிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கும் அனுப்பப்படலாகா.

8. அரசினர் சேவையிலுள்ள பதவிளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கு விண்ணப் பதாரிகளின் கவனம் கோரப்படுகிறது.

பி. எச். டி. எச். டீ சில்வா,
தேசீய நூதனசாலைகள் அதிபதி.

தேசீய நூதனசாலைகள் பகுதி,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 12 ந் உ.

(மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவம்)

**தேசீய நூதனசாலைகள் பகுதியிலுள்ள நூல்நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)
(அ) சொந்தப் பெயர் : ————.
(ஆ) ஏனைய பெயர்கள் : ————.
2. தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதி : ————.
4. (அ) சாதியம் : ————.
(ஆ) விண்ணப்பதாரி வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாக வா இலங்கைப் பிரஜை : ————.
(இ) பின்வருவோர் பிறந்த இடம்—
(i) விண்ணப்பதாரி : ————.
(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.

குறிப்பு :—விண்ணப்பதாரி பதிவு காரணமாக இலங்கைப் பிரஜையா யின் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பிரசாவுரிமைப் பத்திரத் தின் இலக்கம், திகதி ஆகியவை விண்ணப்பத்தில் கொடுபட வேண்டும்.

5. விண்ணப்பதாரி விவாகம் செய்தவரா/செய்யாதவரா/தாரமிழந்த வரா ? : ————.
6. கல்வித் தகைமைகளும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சையும் அப்பரீட்சையில் சித்தியெய்திய திகதியும் : ————.
7. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தி யோகம் பற்றிய விபரங்கள் (புரிந்திருப்பின்) : ————.
8. யாதேனும் விசேட தகைமை பற்றிய விபரங்கள் : ————.
9. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் விலாசங்களும் (விண்ணபத்துடன் இவை இணைக்கப்பட வேண்டும்) : ————.
10. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணபத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையுமென இத்தால் உறுதியளிக் கின்றேன். இவ்விபரங்களில் எவையேனும் பிழையானவை அல்லது பொய்யானவை எனக்காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னரா யின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

2-660—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## அரசாங்கக் கட்டு வேலைத் திணைக்களம்

### மின்சார முகாரிப் பதவி தரம் I

மின்சார முகாரிப் பதவி தரம் ஒன்றுக்கான விண்ணப்பங் கள் இத்திணைக்களத்தாற் கோரப்படுகின்றன. விண்ணப்பங் கள் யாவும் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் நிரப்பப் பெற்று அரசாங்கக் கட்டு வேலைத் திணைக்கள அதி பதி (கிளை ஈ) கொழும்பு என்ற விலாசத்திற்கு 21.3.1969 அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் ஆண் டொன்றிற்கு ரூ. 3,900—8×180 ரூ. 5,340 ஆகும்.

3. **நியமன நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்தகைமையுமுடையது. நியமனம் பெறுபவர் விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம் பளத் திட்டத்திற்குப் பணம் செலுத்தும்படி வேண்டப் படுவர்.

4. **தகைமைகள்.**—விண்ணப்பகாரர்கள் மின் கருவி நிறு வுதலிலும் மின் வேலையிலும் அனுபவம் உள்ளவராயிருத்தல் வேண்டும். அத்துடன் எல். ரி. கம்பி அமைத்தல் பூமியின் கீழ் வடக் கம்பி அமைத்தல், ஆடலோட்டத்தொகுதிகள் பேணுதல் நடத்துதல், எல். ரி. மின் தொடர் பிணைப்புப் பலகை இயக்குதல் பேணுதல் போன்றவற்றிலும்,

(அ) மின்சாரத் திணைக்களத்தின் முதலாம் தர மின்சார முகாரிப் பரீட்சையில் சித்தியடைந்த ஓர் அரசாங் கத் தொழிற்சாலை முகாரியாகவும் அத்திணைக்களத் தில் 2 வருடங்கள் தொடர் பயிற்சி பெற்றவராகவும் ;

(ஆ) ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் ஓர் அரசாங்க மின்சாரத் திணைக்களத்தில் அல்லது வேறு அர சாங்கத் திணைக்களத்தில் II ம் தர மின்சார முகா ரியாகக் கடமையாற்றியவராகவோ ; அல்லது

(இ) 10 வருடங்களுக்குக் குறையாமல் ஓர் அங்கீகரிக்கப் பெற்ற வியாபார நிறுவனத்தில் மின்சார முகாரிப் பதவி வகித்தவராகவோ ; அல்லது

(ஈ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடன் சிட்டி கில்டஸ் இலண்டன் நிறுவனத்தின் மின்சாரப் பொறியியல் கடைசிச் சாதனைப் பரீட்சையிலும் சித்தியெய்தியவராயிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை.**—45 வயதுக்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் உள்ளவர்க்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டு மேலெல்லை அமையாது).

6. **சேவைகளின் நிபந்தனைகள்.**—அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகள், நிதிப் பிரமாணங்கள், நடை முறைக் கோவைப் பிரமாணங்கள், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் வெளியிடப்படும் திணைக்களக் கட்டளைகள் அல்லது பிரமாணங்களுக்கு அமைந்ததாகவே இந்நியமனங் கள் அமையும்.

7. விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தங்கள் விண்ணப் பத்துடன் கீழே தரப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**நன்கு கவனிக்க:** சமயச் சடங்குச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கென வழங்கப் பெற்ற சான்றிதழ் கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா)

(ஆ) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) பொறி இயல் தகைமைச் சான்றிதழ்.

(ஈ) சேவைக்கால, அனுபவச் சான்றிதழ் முதலியன.

8. அரசாங்க உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களங்களின் ஊடாகத் திணைக்களத் தலைவர்களினூடாக குறிப்பிட்ட திகதிக்குப் பின் அனுப்பி வைக்கப்பட்டால் அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஆனால் குறிப்பிட்ட திகதிக்கு முன் அவ்விண்ணப்பக்காரரின் திணைக்களத் தலைவரிடம் கிடைக்கப் பெற்றுத் தாமதத்திற்கான தகுந்த காரணங்காட்டப்பட்டுச் சிபாரிசு செய்யப்பட்டாலன்றி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சார்பான கடிதத் தொடர்புகள் யாவும் கட்டு வேலைத் திணைக்கள அதிபதி (கிளை இ) என்ற விலாசத்திற்கேயன்றித் தனிப்பட்ட முறையில் இத்திணைக்கள உத்தியோகத்தர் எவருக்கும் அனுப்புதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

10. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் யாவும் இவ்வர்த்தமானியில் முதலாம் பாகம், இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன; அவற்றைக் கவனிக்குக.

ஜெ. ஜெ. இராசநாயகம்,
கட்டு வேலை அதிபதிக்காக.

கொழும்பு, 24.1.1969.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**மின்சார முகாரிப் பதவி, தரம் ஒன்றிற்கான விண்ணப்பம்**

(1) முழுப் பெயர் :————
(தனித்தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) வேறு பெயர்கள் :————.

(2) முகவரி :————.

(3) (அ) விண்ணப்பகாரரின் பிறந்த திகதியும் இடமும் :————. (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)
(ஆ) 69.3.21 தேதியன்று சரியான வயது மாதங்கள் :————.

(4) சாதியம் :————.

(5) பின்வருவோர் பிறப்பிடம் :————.
(அ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பேரன் : ————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பீட்டன் : ————.

(6) தற்போது ஏதும் தொழில் வகிப்பின் அத்தொழிலும், பெறும் சம்பளமும் :————.

(7) கல்வித் தகைமைகள் :————. (சித்தியெய்திய பரீட்சையைக் குறிப்பிடவும்.)

(8) தொழில் நுட்பக் கல்வித் தகைமைகள் :————. (சித்தியெய்திய பரீட்சையைக் குறிப்பிடவும்.)

(9) முன்பு மின்சார அமைப்புகளிலும் நிறுவுதலிலும் பெற்ற அனுபவம், வகித்த உத்தியோகம் என்பனவற்றின் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு என்னாற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமிக்கப்பட்ட பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரனாவேன் என அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-729-21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

இல. AA. 69/X 2061/68.

### கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி: விவசாய எந்திரவியல் விரிவுரையாளர் II ந் தரம்**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஹாடி சிரேட்ட தொழிநுட்ப நிலையத்திலுள்ள விவசாய எந்திரவியல் விரிவுரையாளர் II ந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.3.7

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.3.14

குறிப்புகள் : (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும். அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்

கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அநாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. சம்பளமும் சகாயப்படிகளும்

இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :— ரூ. 4,080—360—ரூ 8,400 வருடாந்தம்.

குறிப்புகள் : (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக ரூ. 5,160 (வருடம்) பெறுதற்கு உரித்துடையராவர்.

(ii) ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில் நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரி அல்லது சம மட்ட அல்லது உயர்ந்த மட்ட அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் உயர்ந்த மட்டத்தில் படிப்பித்தலில் 3 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ரூ. 5,160 (வருடம்) ஆகிய ஆரம்பச் சம்பளத்துக்குச் சேர்த்துக்கப்படுவார்கள்.

(iii) இலண்டன் குடியியல் எந்திரவியலாளர் நிறுவனத்தின் அல்லது மின்சார எந்திரவியலாளர் நிறுவனத்தின் அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமை போன்ற பூரண உயர்தொழில் தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர் ரூ. 7,320 (வருடம்) ஆகிய ஆரம்பச் சம்பளத்துக்கு உரித்துடையராவர்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள் அவர்களது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியை—அதாவது வருடம் ரூ. 8,400 அடைந்து அப்படியில் ஒரு வருடம் சேவை புரிந்த பின் வருடாந்தம் ரூ. 480 உயர்ச்சிப் பணமாகப் பெற்று வருடம் ரூ. 10,800 என்ற சம்பளப் படிவரை சம்பளம் பெறுதற்கு உரித்துடையராவர்.

4. தேவைப்படும் தகைமைகள்

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969.3.7 ந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் விவசாய அல்லது பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் பட்டம்

அல்லது

சமமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

(ஈ) சிங்களத்தில் படிப்பிக்கும் ஆற்றல் ; அல்லது இப்பதவிக்கு நியமிக்கப்படும் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதானங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு).—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக்கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி யனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப் படின் அவர்கள் விண்ணப்பப் பெற்றமை பற்றி அறிவிக்கப் படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 14.2.1969.

2-750—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறு பேறுகளும் பிறவும்

திறைசேரி இல. 1/23/35/2 (ஜி)

## நாட் சம்பளம் பெறும் அமய தட்டெழுத்தாளர்களுக்கும் சுருக்கெழுத்தாளர்களுக்கும் தற்காலிக நிலையும் மாதச் சம்பளமும் அளிப்பதற்கான தகுதித் தேர்வு, செத்தம்பர், 1968

1968 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆம் தேதி நடாத்தப்பட்ட, 1966 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ஆந்தேதிய 685 ஆம் இல. திறைசேரிச் சுற்றிக்கையில் குறிப்பிட்டுள்ள தகுதித் தேர்வில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அமய சுருக்கெழுத்தாளர்களும் அமய தட்டெழுத்தாளர்களும் தேறியுள்ளார்களெனப் பொது அறிவிப்பிற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமய சுருக்கெழுத்தாளர்

| பெயர் | திணைக்களம் | மொழி |
|---|---|---|
| 1. அன்ரனி, டபிள்யு. டி. பி. | நீதவன் நீதிமன்றம், இரத்தினபுரி | சிங்களம் |
| 2. தேவராசா, ஐ. ஜி. (எவ்) | நீதவான் நீதிமன்றம், மாத்தறை | சிங்களம் |
| 3. மிறியாகல்ல, எஸ். ஏ. எஸ். (எவ்) | நீதவான் நீதிமன்றம், அவிசாவலை | சிங்களம் |
| 4. மல்கொலன்ட, பீ. (எவ்). | பொறியியற் கிளை, நீர்பாசனம் | ஆங்கிலம் |
| 5. பெரேரா, எம். என். கியூ. | விலைமதிப்பு | ஆங்கிலம் |

அமய தட்டெழுத்தாளர்

| பெயர் | திணைக்களம் | மொழி |
|---|---|---|
| 6. விமலரத்தின, எம். | அ. க. தி. | ஆங்கிலம் |

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு.
1969, பெப்பரவரி மாதம் 14 ந உ.

2-747—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

# இலங்கைப் பரீட்சைப் பகுதி

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை—1968

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கான கலைப்பாடங்களுக்குரிய பரீட்சை 1969 ஏப்பிரல் 20 ஆம் திகதி ஆரம்பமாகும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
கொழும்பு 2,
பெப்பிரவரி 14, 1969.

2-749—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

திறைசேரி இல. 1/23/6/10(ஜி).

## மத்திய எழுதுவினைஞர் பரீட்சை—மே, 1969

1968, திசம்பர் மாதம் 20 ஆந் தேதியின் 14,833 ஆம் இல. இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பெற்றதான 1968 திசம்பர் மாதம் 12 ஆந் தேதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் 6(iii)(ஆ) பந்தியில் விதிக்கப்பட்ட மேற்கூறிய பரீட்சைக்குரிய கல்வித்தகைமைகள் மீளவாயப்பட்டு பரீட்சைத் திணைக்களம் வழங்கும் தமிழ் வர்த்தகச் சான்றிதழ் உட்படுத்தப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. ஆகவே மேற் சொல்லப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் 6(iii)(ஆ) பந்தி பின்வருமாறமையத்தக்கதாய் திருத்தப்படுகின்றது :—

6(iii)(ஆ)—"இலங்கை பரீட்சைத் திணைக்களம் வழங்கும் சிங்கள/தமிழ் வர்த்தகச் சான்றிதழ்; அல்லது"

2. இப்பரீட்சைக்குரிய விண்ணபத்தின் முடிவுத் தேதி 1969 மார்ச்சு 7 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

3. இப்பரீட்சை சம்பந்தமான பிற விதிகளும் பிரமாணங்களும் மாற்றப்படாதுள்ளன.

4. இப்பரீட்சை நடாத்தப்படும் நிலையங்கள் பின்வருமாறு :—

கொழும்பு, கம்பகா, நீர்கொழும்பு, மொரட்டுவா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரேலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மன்னார் வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை, குருநாகல், புத்தளம், சிலாபம், அனுராதபுரம், பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்
செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு பெப்புரவரி மீ 14 ஆந் உ.

2-746—21.2.69 ந் திகதிய வர்த்மானி இல. 14,842.

## அரசகரும மொழித் திணைக்களம்
### சிங்களத் தட்டெழுத்துப் பயிற்சி வகுப்புகள்

அரச கருமமொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படவிருக்கும் மேற்படி பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகைமையுடைய ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வகுப்புகள் ஏறத்தாழ ஆறு மாதம் தொடர்ந்து நடை பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது ; வகுப்புக்கள் கொழும்பில் அலுவலக நேரங்களில் நடைபெறும். ஏறத்தாழ 40 பயிற்சியாளருக்கு இடமுண்டு.

2. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) இலங்கையராயிருத்தல் வேண்டும் ; (பரம்பரை வழியாக அல்லது பதிவு பெற்று இலங்கைப் பிரசையானவரே "இலங்கையர்" எனப்படுவர்) ;

(ஆ) (i) இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ; சிங்களத்திலும், எண் கணிதம், ஆரம்பகணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒன்றும் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) கல்விப் பொது தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பெற்றிருத்தல் வேண்டும் ; ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் சிங்களத்திலும், எண்கணிதம், தூயகணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சியடைந்திருப்பதுடன் ஒரே முறையில் குறைந்தது ஐந்து பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) மேற்கூறப்பட்ட (i), (ii) ஆகியவற்றிற்குச் சமமான அல்லது அவற்றிற்கு மேலான பரீட்சைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) 15.3.69 அன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பகாரர் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு அல்லது சோதனைக்குச் சமூகமளித்தல் வேண்டும் ; அவற்றிற்காகிய காலமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டா. விண்ணப்பத்திலுள்ள விவரங்களில் எதுவாயினும் பிழையாகவிருப்பது தெரிவுக்கு முன் காணப்படின் விண்ணப்பகாரர் தெரிவுக்குரிய தன் தகைமைகளை இழப்பர். தெரிவு செய்யப்பட்ட பின் கண்டு பிடிக்கப்படின் அவர் வகுப்பிலிருந்து நிறுத்தப்படுவதற்கு ஆளாவர்.

4. பயிற்சிக் காலத்தில் எவ்வகைப் படியாயினும் கொடுக்கப்பட மாட்டாது. பயிற்சிக் கால முடிவில் பரீட்சை ஆணையாளரால் ஒரு தகுதிகாண் பரீட்சை நடத்தப்படும் ; அப்பரீட்சையிற் சித்தியடையும் பயிற்சியாளருக்கு ஒரு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் இந்தத் திணைக்களத்திலோ, அரசாங்க சேவையிலோ தற்காலிகமாகவேனும், நிரந்தரமாகவேனும் வேலை கொடுக்கப்படுமென உத்தரவாதமளிக்க முடியாது.

5. பயிற்சிக் காலத்தில் காலத்துக்குக் காலம் சோதனைகள் நடத்தப்படும் ; அச் சோதனைகளின் பெறுபேறுகளின் படியே பயிற்சியாளர் தொடர்ந்து பயிற்சி பெற அனுமதிக்கப்படுவர். எப்பயிற்சியாளரினதும் வரவு, படிப்பு, பொதுத் தகுதி அல்லது நடத்தையில் இத்திணைக்களத்திற்குத் திருத்தியேற்படாவிடின் அன்னார் பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலாயினும் உடனடியாக நீக்கப்படுதற்கு ஆளாவர். அவ்வாறு நீக்கப்பட்ட பயிற்சியாளர் எவராயினும் பின்னர் வரும் பயிற்சி வகுப்புக்களிற் சேர்வதற்குத் தகவுடையராகார். காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் பிரமாணங்கள், அறிவுறுத்துரைகள் ஆகியவற்றிற்கு அமைந்து நடப்பதாக ஒரு உடன்படிக்கை, அதற்கெனவுள்ள ஒரு படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்குமாறு ஒவ்வொரு பயிற்சியாளரும் வேண்டப்படுவர்.

6. பயிற்சியாளர் வேண்டுமென்று அசட்டை செய்தல், கவனமில்லாதிருத்தல் ஆகியவற்றின் விளைவாகக் களஞ்சியப் பொருள்கள் காணமற்போவதாலும் உபகரணங்கள் முதலியன சேதமடைவதாலுமேற்படும் நட்டத்தை ஈடு செய்வதன் பொருட்டு ஒவ்வொரு பயிற்சியாளரும், வகுப்பிற் சேரும் போது, ரூபா 100 பிணை, இரண்டு பிணைகாரர் மூலம் கொடுத்தல் வேண்டும்.

7. இவ் வகுப்புக்களிற் சேர்வதற்காகிய விண்ணப்பங்கள் கீழ்க் காணும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு ஆணையாளர், அரசாங்க மொழி அலுவல்கள், த. பெ. 598, கொழும்பு 7, என முகவரியிட்டு, 1969 மார்ச் 15 அன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆணையாவரின் பெயருக்கு அனுப்பக்கூடாது.

பீற்றர் பி. அபயசேகரா,
ஆணையாளர்,
அரச கரும மொழி அலுவல்கள்.

அரச கரும மொழித் திணைக்களம்,
22, நீட் வழி,
கொழும்பு 7,
1969 பெப்புருவரி 11 ம் திகதி.

### சிங்களத் தட்டெழுத்தாளர் பயிற்சி வகுப்பிற் சேர்வதற்காகிய விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக எழுதுக)

2. முகவரி :————.

3. தேசிய இனம் :————.
(பரம்பரையான இலங்கையரா அல்லது பதிவு பெற்ற இலங்கையராவென்பதைக் குறிப்பிடுக)

4. 15.3.1969 அன்றுள்ள வயதும் பிறந்த தேதியும் :————
(பிறப்புச் சான்றிதழ் (ஒருபடி மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும்.)

5. ஆண் / பெண் :————.

6. மணமானவர் / மணமாகாதவர் :————.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையும், பாடங்களும், திகதிகளுடன் :————.

8. இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ்ப் (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைத் தேர்ச்சியும் சாதாரணத் தேர்ச்சியும் பெற்ற பாடங்கள். (படிகளை இணைக்க மூலங்களையல்ல, இன்னும் சான்றிதழ்கள் கிடைக்காவிட்டால் அவ்வாறு குறிப்பிடும் அதிபரின் / தலைமை ஆசிரியரின் சான்றிதழ் அல்லது வேறு செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) :————.

9. கல்வி கற்ற இடமும் தேதியும் :————.

10. சிங்களத்திற் பெற்ற விசேட தகைமைகள் உண்டாயின் அவை :————.

11. சிங்கள / தமிழ் / ஆங்கில தட்டெழுத்திற் பெற்றுள்ள அனுபவம் :————.

12. இப்பொழுது ஏதாவது தொழில் செய்வதாயின் அத் தொழில் :————.

13. பெற்ரோர்/பாதுகாவலர் பெயரும் முகவரியும் :————.

14. இரு நடுவரின் பெயர்களும் பதவிப்பெயர்களும் :——

15. குணச் சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (படிகள் மாத்திரம்) இணைக்கப் படுதல் வேண்டும்; ஒரு சான்றிதழ் கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் :————. (மூன்று சான்றிதழ்கள்.)

16. வேறு தகைமைகள் உண்டாயின், அவை :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

1-572—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

திறைசேரி இல. 1/23/29/2(ஜி).

## சிருப்பர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப் பதற்குப் பரீட்சை—ஏப்பிரல், 1969

1969 சனவரி மாதம் 3 ஆந் தேதியின் 14,835 ஆம் இல. இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தான 1968 திசெம்பர் மாதம் 20 ஆந் தேதியிடப்பட்ட வர்த்த மானி அறிவிப்பின் 5(iii)(உ) பந்தியில் விதிக்கப்பட்டுள்ள மேற்கூறிய பரீட்சையின் கல்வித் தகைமைகள் மீள்வாயப் பட்டுப் பரீட்சைத் திணைக்களம் வழங்கும் தமிழ் வர்த்தகச் சான்றிதழும் அவற்றுள் சேர்க்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே, மேற் சொல்லப்பட்ட வர்த்த மானி அறிவிப்பின் 5(iii)(உ) பத்தி பின்வருமாறமையத் தக்கதாய் திருத்தப்படுகின்றது :—

"5(iii)(உ)—இலங்கை பரீட்சைத் திணைக்களம் வழங்கும் சிங்கள/தமிழ் வர்த்தகச் சான்றிதழ்."

2. மேற்சொல்லப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் தமிழ் மொழி பெயர்ப்பிலுள்ள பந்தி 6, குறிப்பு iii இன் 16 ஆம் வரியிலுள்ள "தகுதியுடையவராவார்" என்பது "தகுதி யுடையவராகார்" எனத் திருத்தப்படுகின்றது.

3. இப்பரீட்சை முன் அறிவித்தபடி 8.4.1969 ந் தேதியில் அல்ல 19.4.1969 ந் தேதி நடாத்தப்படும். இப்பரீட்சைக்குரிய விண்ணப்பத்தின் முடிவுத் தேதி 1969 மார்ச்சு மாதம் 8 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

4. இப்பரீட்சை சம்பந்தமான பிறவிதிகளும் பிரமாணங் களும் மாற்றப்படாதுள்ளன.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்
செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969 ம் ஆம் பெப்புரவரி மீ 14 ஆந் உ.

2-745—21.2.69 ந்திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## நொத்தாரிசு பிரதம பரீட்சை — மே, 1969

**பரீட்சை நடைபெறும் திகதி :** —சிங்கள பாஷையில் தொழில் நடத்தும் பிரசித்த நொத்தாரிசுமாராகும் கருத்துடன் உடன்படிக்கை செய்து பயிற்சி பெறும் பொருட்டு லிகிதர்களை அனுமதிப்பதற்கான ஓர் போட்டிப் பரீட்சை, பரீட்சை இலாகாவால் 1969 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதியன்று கொழும்பில் நடத்தப்படும்.

2. **வயது :** —பரீட்சை ஆரம்பிக்கும் திகதியன்று பரீட்சார்த்தி பதினெட்டு வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்.

3. **நொத்தாரிசுகளின் லிகிதர்கள் :**— இப்பரீட்சை சம்பந்தமாய் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குமுன்பு, 5 வருடங்களுக்குக்குறையாமல் உடன் தொடர்ச்சியாக, நொத்தாரிசு உயர்தொழிலை புரியும் நோக்கத்துடன், ஓர் நொத்தாரிசுவின் கீழ் வேலையில் அமர்த்தப்பட்ட நொத்தாரிசுகளின் லிகிதர்கள் மாத்திரம், நொத்தாரிசுகளின் லிகிதர்களாக கருதுவதற்கு உரித்துடையோராவார்கள். அவ்வித தகைமை பெற்ற விண்ணப்பகாரர்கள் தாம் சேவைசெய்த நொத்தாரிசுவிடமோ அல்லது நொத்தாரிசு மார்களிடமோ தம் மொத்தச் சேவைக்காலத்தை நிரூபிக்க உறுதியுரையோ அல்லது உறுதியுரைகளையோ பெற்று, விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். நொத்தாரிசுமார்களின் லிகிதர்களாய் கடமையாற்றிய காலத்தை அல்லது காலங்களை அத்தாட்சிப்படுத்தி இலங்கை நொத்தாரிசு லிகிதர்கள் சங்கத்திடமிருந்து அல்லது தாம் கடமையாற்றிய பகுதி காரியாதிகாரியிடமிருந்தோ அல்லது காரியாதிகாரர்களிடமிருந்தோ உறுதியுரைகள் பெற்று அனுப்புதல் உதவியாகவிருக்கும்.

4. தேவைப்பட்ட பரீட்சார்த்திகள் தெரிவு செய்தல் பரீட்சைத் தேறுதலிலும், அபேட்சகரின் ஒழுக்கம், மதிப்பு, தகுதி ஆகியவற்றிலும் தங்கியிருக்கும்.

5. **பாடத்திட்டம் பின்வருமாறு :**— பாஷை : சிங்களம்—2 மணி 200 புள்ளிகள். எழுத்துக்காக 40 புள்ளிகள் ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி தனது கருத்துக்களைத் தெளிவாகவும் இலக்கண வழுவின்றியும் எழுதும் ஆற்றலையுடையவரா என்பதைச் சோதிக்கும் வகையில் கட்டுரை அமையும். பாஷை எழுதும்முறை, வாக்கியநடை என்பன விசேடமாகக் கவனிக்கப்படும். கட்டுரைக்கு அரை மணி நேரம் பயன்படுத்தல் வேண்டும். ஒரு பந்தியை மூன்றில் ஒன்ருகச் சுருக்கி எழுதும்படியுள்ள வினவும் கேட்கப்படும். செய்யுளின் பொழிப்புரை செய்யுளினை அல்லது உரைப்பகுதியை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், பழைய உரைநடையை தற்கால உரைநடையில் அமைத்தல், தமிழ் மொழியும், மரபும் என்பனபற்றிய வினுக்கள் கேட்கப்படும்.

எண்கணிதமும், கூட்டல், கழித்தலும்—1½ மணி. 100 புள்ளிகள் பின்னங்கள், தசமம் உட்பட எண் கணிதத்தில் உள்ள நான்கு விதிகளும் உள்ள தேர்ச்சி, நிறுத்தல், நீட்டல், நேரம், பரப்பு, கனம், முகத்தல் என்பன போன்ற அளவைகள், மீட்டர் அளவை முறை, விகிதமும் விகிதச்சாரமும், நூற்றுவீதம், இலாப நஷ்டம், சராசரி, தனிவட்டி, தொடர் வட்டி, மாற்று வீதம்.

பொது அறிவு—45 நிமிடம் 100 புள்ளிகள். தற்கால நிகழ்ச்சிகள் (இலங்கையும் உலகமும்), புவியியல், சரித்திரம், இலக்கியம், கலாச்சாரம், கலையியல், விஞ்ஞானவியல் என்பன பற்றிய சுருக்கு விடைகளுக்குரிய வினுக்கள் கேட்கப்படும். இலங்கையைப்பற்றிய விசேட அறிவு எதிர்பார்க்கப்படும்.

6. நேர அட்டவணை

**திகதி—1969 மே 22**

முற்பகல் 9.30 தொடக்கம் 11.00வரை—எண்கணிதம்.

பிற்பகல் 12.30 தொடக்கம் 2.30 வரை—பாஷை

பிற்பகல் 2.45 தொடக்கம் 3.30 வரை—பொது அறிவு.

7. இத்தால் கொடுக்கப்பட்டிருக்கின்ற மாதிரி விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம் விண்ணப்பப் பத்திரங்களைப் பதிவுகாரியகர்த்தர், கொழும்பு என விலாசமிட்டு, பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரரின் சொந்தக் கையெழுத்தில், சிங்கள பாஷையில் விண்ணப்பங்கள் எழுதப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடைசித் திகதி: விண்ணப்பப் பத்திரங்கள் பதிவுக்காரியகர்த்தர் காரியாலயத்தில் 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு பிந்தாமல் வந்து சேரும்படி அனுப்புதல் வேண்டும்.

9. **விண்ணப்பக் கட்டணம் :**— விண்ணப்பப் பத்திரம் விண்ணப்பம் செய்பவரால் முறைப்படி கீறிக்கிறுக்கப்பட்ட 10 ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டப்பெற்றதாயிருக்க வேண்டும்.

10. விண்ணப்பத்தோடு அணைக்க வேண்டிய பத்திரங்கள் :—

(அ) அபேட்சகரின் நல்லொழுக்கத்தையும், யோக்கியதைகளையும் பற்றி இரு சான்றுரைகளில் ஒன்ருவது மூன்று மாதத்திற்கு முற்படாத நிதரிசனப் பத்திரங்களும் (அபேட்சகர் இதற்குமுன் வேலையில் ஏற்பட்டிருந்திருப்பாராகில் கடைசியாக அவரை வேலைக்கு வைத்திருந்தவரிடமிருந்து ஒரு நிதரிசனப் பத்திரம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்).

(ஆ) அபேட்சரின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் அல்லது அவரின் வயதைப்பற்றிய வேறு சாட்சியமும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்டு இருக்கும் (அ), (ஆ) இவைகளின் மூலப்பிரதிகள் மட்டுமே விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

11. விண்ணப்பத்திற்குரிய கட்டணத்தை திருப்பிக் கொடுத்தல் :

(அ) இப்பரிட்சைக்குப் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகளை அவர் நிறைவேற்ருததின் நிமித்தம் அபேட்சகர் ஒருவரை ஏற்றுக் கொள்ளாது தள்ளிவிடுமிடத்து அவருடைய அல்லது அவளுடைய விண்ணப்பப் பத்திரத்தில் ஒட்டியுள்ள முத்திரைகளின் பெறுமதியில் ஐந்தில் மூன்று பங்கு அவருககு அல்லது அவளுக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட அபேட்சகர் ஒருவர், பரீட்சைத் திகதிக்கு, குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்பாகச் பரீட்சைக்கு பிரவேசியாது விடப்போவதைப்பற்றி பதிவுகாரிய கர்த்தருக்கு அறிவித்தல் கொடுப்பாராகில், அல்லது அவ்வபேட்சகர் சுகவீனத்தால் பரீட்சைக்கு போகமுடியாது, அச் சுகவீனத்தைப்பற்றி ஓர் தகுதியான வைத்தியரிடமிருந்து ஓர் மருத்துவச் சான்றிதழ் அனுப்பினுல் அவருடைய விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டியுள்ள முத்திரைகளின் பெறுமதியில் அரைவாசி அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(இ) வேறெக்காரணத்தினுலும் யாதொரு பணமும் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது.

12. இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட அபேட்சகர் ஒவ்வொருவருக்கும் ஓர் பிரவேசச் சீட்டும், ஒப்பப் பத்திரமும் அவருடைய விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படும். குறித்த பிரவேசச் சீட்டையும் (நிரப்பப்பட்ட) ஒப்பப் பத்திரத்தையும் பரீட்சை நடைபெறும் இடத்திலும் நேரத்திலும் கொடுத்தல் வேண்டும்.

13. தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடமும் பரீட்சிக்கப்படும் நேரத்தில் மேற்பார்வையாளர் திருத்திப்படத்தக்கதாக பரீட்சை மண்டபத்தில் தம்மை நிரூபிப்பதற்கான அத்தாட்சிப்பத்திரங்களைச் சகல அபேட்சகர்களும் காட்டவேண்டும். அக்கருமத்திற்காகப் பிற் கூறப்படும் சாதனங்களிலொன்று எற்றுக்கொள்ளப்படும்.

(அ) போஸ்ட்மாஸ்டர் ஜெனரலால் வழங்கப்படும் அடையாளச்சீட்டு ;

(ஆ) பரீட்சைத் திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வழங்கப்பட்ட பெலப்புள்ள .“ பாஸ்போட் ” ;

(இ) பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்குள் ஒரு அரசாங்க இலாகாவின் அதிகாரத்தின் பேரில் வழங்கப்பட்டதும், அவை வைத்திருப்பவரின் புகைப்படத்தைக் கொண்டதுமான யாதாயினுமொரு உறுதியுரை. உத்தரவுப்பத்திரம் அல்லது வேறு சாதனங்கள்.

அபேட்சகர்கள் எவரும் தம்பிரவேசச் சீட்டோடு மேற்குறிக்கப்பட்டவற்றில் யாதாயினுமொரு சாதனமாவது வைத்திராவிடில் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

14. விண்ணப்பக்காரர் பரீட்சைக்கு பிரவேசிப்பதற்கு விண்ணப்பஞ் செய்ய உத்தேசித்திருப்பதாகத் தாம் வசிக்கும் மாவட்ட அதிபரிடம் அறிவித்தல் கொடுக்க வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை.

ஆர். சமரசேகர,
பதிவுக்காரியகர்த்தர்.

பதிவுக்காரியகர்த்தர் அலுவலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஷ மாசி மீ 14 ந உ.

**மேற்குறிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தின் மாதிரிப்பத்திரம்**

திகதி : . . . . . . . . . . . . .

பதிவுக்காரியகர்த்தர்,
கொழும்பு.

உடன்படிக்கைப்பட்ட லிகிதர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கு விண்ணப்பம்

ஐயா,

நொத்தாரிசு ஆகும் நோக்கத்துடன் உடன்படிக்கைப்பட்ட லிகிதராய் அமர நான் உத்தேசித்திருபதால் இதற்கென 1969 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதி நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்கு விண்ணப்பம் செய்கிறேன்,

2. எனது முழுப்பெயர் : . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

3. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பெரும்பகுதியில். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்ற இடத்தில் நான் வசிக்கிறேன்.

4. பரீட்சை தொடங்கும் திகதியிலிருந்து எனக்கு வயது பதினெட்டுக்குக் குறையாததாக இருக்கும். எனது பிறப்புச் சாட்சிப்பத்திரம் (அல்லது. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ஆகிய எனது வயதைக் குறிக்கும் வேறு அத்தாட்சிப்பத்திரம்) (அ) என அடையாளமிடப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

5. உயர்தர நீதிமன்ற நியாயதுரந்தரராகிய. . . . . . . . . . . . . . . . . . . . .ன் கீழே பொருத்தவுடன்படிக்கை செய்யும் லிகிதராகக் கடமை பார்க்க எண்ணுகிறேன்.

6. நான் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .பெரும்பகுதிப் பிரிவில். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பாஷையில் தொழில், நடத்த உத்தேசித்திருக்கிறேன்.

7. (அ) எனது நல்லொழுக்கத்தையும் தகுதியையும் பற்றி. . . . . . . . . இடத்து. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ராலும் கொடுக்கப்பட்ட இரு நிதரிசனப்பத்திரங்களின் மூலப் பிரதிகளை (ஆ), (இ) என அடையாளமிட்டு இத்துடன் இணைத்திருக்கிறேன்.

*(ஆ) நான் கீழே குறிக்கப்படும் நொத்தாரிசு/நொத்தாரிசுமார்களின் கீழ் அவருடைய/அவளுடைய பெயர்/பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்ட காலத்தில்/காலங்களில் ஒரு லிகிதராய் கடமையாற்றி வந்திருக்கிறேன்.

†. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பெரும்பகுதியிலிருக்கும் நொத்தாரிசு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . அவர்களின் கீழ் 19. . . . . . .ம் ஆண்டு . . . . . . . . . . . . . . . . . .மாதம் . . . . . . . . ந் திகதி தொடக்கம் 19. . . . .ம் ஆண்டு. . . . . . . . . . . . . மாதம். . . . . . . . . . . ந் திகதிவரை.

*(இ) நான் நொத்தாரிசுவின் லிகிதராக மேலே சொல்லப்பட்ட காலத்தில்/காலங்களில் கடமையாற்றினேனென்பதற்குச் சான்ருக மேற்சொல்லப்பட்ட நொத்தாரிசுவிடம்/நொத்தாரிசுமார்களிடமிருந்து உறுதியுரையை/உறுதியுரைகளை இத்துடன் இணைக்கிறேன்.‡

8. உடன்படிக்கைப்பட்ட லிகிதர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு பிரவேசிக்க அனுமதிதரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

______________,
விண்ணப்பபம் செய்பவரின் கையொப்பம்.

தபால் விலாசம் :

______________________
______________________
______________________

| |
|---|
| விண்ணப்பக்காரர் இதில் 10 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி, அதன் மேல் ஒப்பமும் திகதியும் இடவேண்டும் |

*தேவையில்லாதவற்றைக் கீறிவிடவும்.

†எத்தனை முறை தேவையோ அத்தனைமுறை எழுதவேண்டும்.

‡முதலாவது உறுதியுரையை “ ஈ ” என்று அடையாளமிடவும் ; மற்றவைகளை “ உ ”, “ ஊ ” என்று முறையே அடையாளமிடவும்.

2–748—21.2,69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### 4 இலக்கங்களுள்ள கடைகளின் வரிசை அமைத்தல்—மஹியங்கனை வகுத்தற் திட்டம்

தேசிய வீடமைப்புத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் மகியங்கனையில் 4 இலக்கங்களுள்ள கடைகளின் வரிசைகளை அமைத்தற்காக 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொதுவேலைத் திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/அரசாங்க திணைக்களங்களில்/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கட்டட வேலைக்காக ரூபா 5 இலட்சத்துக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச் சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிருப்பரிடம் ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 4 ந் திகதி.

2-804—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் 1 வரிசைக் கடைகளும், மாடிகளும் அமைத்தல்

விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சு, விஜராம ரோட்டு, கொழும்பு—7 இல் உள்ள கேள்விச் சபைத்தலைவரால் மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் கடைகளும், மாடிகளும் அமைத்தற்காக 1969 ம் ஆண்டு மார்சு மாதம் 28 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொதுவேலைத் 'திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/அரசாங்க திணைக்களங்களில்/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கட்டட வேலைக்காக ரூபா 1 கோடிக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச் சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிருப்பரிடம் ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு 1969 ம் ஆண்டு மார்சு மாதம் 17 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 21 ந் திகதி.

2-777—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மணிக்கு 2,000 கலன்கள் வீதம் இறைக்கக்கூடிய 2 அங்குல சுமக்கத்தக்க பம்பிகள் 20 வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

20 பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 1969.3.14 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக் கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பு (ஆ) இறக்குமதி செய்த தொகை அத்துடன் (இ) இறக்குமதி செய்து கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக்காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப் பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " 20 சுமக்கத்தக்க பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக் காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர் காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளை கேள்விப் பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1 எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.3.14 ந் திகதி முற்பகல் 11.15 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 14 ந் உ.

2-738—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கண்டி, கட்டுகஸ்தோட்டை வீதியிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பிரதேச கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 14.3.69 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை, வெரல்லகமை இ. போ. ச. கண்டி (வடக்கு) டிப்போவில் உள்ள தடுப்புக் குடங்கள், றிம்ஸ்கள், குடங்கள், எஞ்சின்கள், வில் அலகுகள், டீசல் தாங்கிகள், டியூப்புக்கள் முதலிய கழிவுப் பொருட்களையும் ஏனைய தேவையற்ற பொருட்களையும் கொள்வனவு செய்து எடுத்துச் செல்லுவதற்கு முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய பொருட்களின் நிரலையும் கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் முதலியன சம்பந்தமான மற்றைய விபரங்களையும், கண்டி கட்டுகஸ்தோட்டை வீதியிலுள்ள இ. போ. ச. பிரதேச முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து அல்லது இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்.

200, கிருல வீதி, கொழும்பு 5.

2-802—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு—5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை, திறைக்குளோரோஎத்திலீன் (TRICHLOROETHYLENE) வழங்குவதற்கு முத்திரையிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

எனது அலுவலகத்தில் 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதியன்று நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். கேள்விப்பத்திரக் கட்டுப் பணமாக ரூபா 100/-ஐ, கொழும்பு—5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும். மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்.

200, கிருல வீதி, கொழும்பு 5.

2-782—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## தபாற் தந்திப் பகுதி

### முறுக்கு நூற்பந்து விநியோகம் செய்வதற்கு

முறுக்கு நூற்பந்து விநியோகம் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, தபாற் தந்திப் போக்குவரத்து தலைமைக் கந்தோர் கட்டிடம், கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1969 மார்ச் 10 ந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிவரை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

2. 1969 மார்ச் 10 ம் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.30 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு 5, நாரென்பிட்டியிலுள்ள பி. த. க. உபகரணக் கட்டிட நலன்புரி உதவி அத்தியட்சர் காரியாலயத்திலிருந்து பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1. பி. த. க. விசாரணை செய்யும் கருமபீடத்தில் கேள்விப் பத்திரப் பொறுப்புப் பணமாக ரூ. 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கு கேள்விப்பத்திர சாதனங்கள் 1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ம் திகதி புதன்கிழமையிலிருந்து 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அலுவலக நேரங்களில் வழங்கப்படும்.

5. கொழும்பு 5, நாரென்பிட்டி பி. த. க. உபகரணக் கட்டிட நலன்புரி உதவி அத்தியட்சர் காரியாலயத்திலிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியும்,
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபாற் தந்திப் பகுதி தலைமைக் காரியாலயக் கட்டிடம்,
கொழும்பு 1.

2-597—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

## தபாற் தந்தித் தொலைபேசித் திணைக்களம்

### விசேஷ கடித உறைகள் வழங்கல்

விசேஷ கடித உறைகள் வழங்கலுக்கான கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 1, தபால் தந்தித் தலைமைக் காரியாலயத்திலுள்ள திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 10 ம் திகதி மு. ப. 10 மணிவரை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 1969 மார்ச் மாதம் 10 ம் திகதி மு. ப. 10.15 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரகாரர், கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது பிரசன்னமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 5, நாராகேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சர் (உபகரணம், கட்டிடம், நலன்புரி, களஞ்சியம்) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரங்கள் மேற்கூறிய அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். கொழும்பு 1, பிரதம தபால் அலுவலகத்திலுள்ள 4 ம் இலக்கக் கரும பீடத்தில் வைப்புப் பணமாகக் கட்டும் 50 ரூபாவுக்கு உரிய பற்றுச்சீட்டைக் கொடுத்து, 1969 பெப்ரவரி மாதம் 26 ம் திகதி தொடக்கம் 1969 மார்ச் மாதம் 9 ம் திகதி பி. ப. 4.30 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

4. கடித உறைகள் செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் உள்ளவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தமாக எதுவிதமான இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் பெறுவதற்கு இந்தப் பகுதி அத்தாட்சிப் படுத்தமாட்டாது.

வேணன் எம். அபேசேகர,
தபாற் கந்தோர்கள் தலைமை அதிபதியும்,
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபாற் தந்தித் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1.

2-598—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

## நீர்ப்பாசன இலாகா

### மின்னேரிய உபபிரிவு

மின்னேரிய உபபிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைக்கு 1969 மார்ச் மாதம் 5 ம் திகதி காலை 10 மணிவரை பொலநறுவையிலுள்ள வடகீழ் மாகாணத்தும் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

| கேள்விப்பத்திர எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த காரரின் பதிவு தொகை ரூபா | கேள்விக் கட்டணத் தொகை ரூபா |
|---|---|---|---|
| எம்.ரி 9 .. | வெவ்வலை குளம் கட்டுதல் | 40,000 .. | 50.00 |

நீர்ப்பாசன இலாகாவில் மேற்குறித்தவண்ணம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் கிராமமுன்னேற்றச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். இக்கேள்விக் காகிய வெற்றுப்பத்திரங்களை பொலநறுவை, கவுடுல்லை, மின்னேரிய ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் அலுவலகநேரங்களில் மேற்குறிப்புப்படி கேள்விக் கட்டணத்தைச் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி பி. ப. 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் தற்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்திச் சமர்ப்பித்தால் அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களோ வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். மேற்குறிப்புப்படி கேள்விக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திய பற்றுச்சீட்டும் இவ்வெற்றுப் பத்திரங்களைப் பெறப் போதுமானது.

இக்கேள்விகளுக்காகிய மேலதிக விபரங்களை மின்னேரிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவல நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. குமாரசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மின்னேரிய உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
ஹிங்குருக்கொட,
1969 ஆண்டு பெப்புருவரி மீ 5 ந் உ.

2–581—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அம்பாந்தோட்டை உப-பகுதி

கீழ் குறிப்பிட்ட வேலைகளுக்காகிய கேள்விப்பத்திரங்கள் எதிர்வரும் 1969 மார்ச் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரையில் தங்காலை, தென்பாக, பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரால் அவரது அலுவலகத்தில் பெற்று உடன் பரிசீலிக்கப்படும்.

| வேலைவிபரம் | பதிவுத் தொகை ரூபா. | கேள்வுக் கட்டுப்பணம் ரூபா. |
|---|---|---|
| (1) மாமொடல்ல–மல்பெத்தாவ பாதை 3, 4 ஆவதுமைல்கள் கற்ரூளி கையிட்டு தார்போடுதல் | 90,000 .. | 100 |
| (2) அம்பாந்தோட்டை கனிஷ்ட நிலதாரிகள் அகம் | 25,000 .. | 25 |
| (3) ஊருபொக்க ஓயா திட்டத்தில் பட்டிய பொல வாவி புனர் நிர்மாணம் .. | 50,000 .. | 50 |

2. மேற்காட்டிய தொகைக்கோ மேலோ நீர்ப்பாசன திணைக்களத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர், கூட்டுறவு சங்கங்கள் கிராம முன்னேற்ற சங்கங்கள், கிராமிய முன்னேற்றச் சங்கங்கள் முதலியவைதகுதியுடைத்து.

3. அம்பாந்தோட்டை நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் 1969 மார்ச் 13 ம் திகதி பெறும் படிவங்களிலே கேள்வி அனுப்பப்படவேண்டும். நீர்ப்பாசனப் பொறியியலாளரால் கேள்வி அனுமதிப்பதற்காக ஒப்பந்தக்காரர் கேள்விப்படிவங்கள் கொடுக்குஞ்சமயம் அவர்களுடைய பதிவேடுகளுடன் அவர்கள் வசம் தற்சமயம் உள்ள ஒப்பந்தங்களில் மிகுதியாகவுள்ள வேலை விபரம்கொடுக்கவேண்டும். மேற்குறிப்பிட்ட கட்டுப்பணம் கச்சேரியிலோ அல்லது மேற் குறிப்பிட்ட அலுவலகத்திலோ கட்டிய பற்றுச்சீட்டுடன் கேள்விப்படிவங்கள் கோரவேண்டும்.

4. அம்பாந்தோட்டை நீர்ப்பாசனப் பெறியியலாளர் அலுவலக இயங்கு நேரங்களில் மேலதிக விபரங்கள் அறியக்கூடும்.

பெ. சத்திவேல்,
நீர்பாசனப் பொறியியலாளர்,
அம்பாந்தோட்டை உப-பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
1969 ம் ஆண்டு பெப்ருவரி மீ 10 ந் உ.

2–639—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

“ ஏ ”

## காணிப் பகுதி ஆணையாளர்

மாத்தறை மாவட்டத்துக்குள் முளடியன நீர் விநியோகிக்கும் திட்டம் (2) தேவாளகம–மஹமடவள வீதி 1 ம் கட்டை (பாலம்) சம்பந்தமாக ரூபா 15,000 க்கு அல்லது அதற்குக் கூடுதலான கேள்விப்பத்திரங்கள் பகிரங்க வேலைப்பகுதி அல்லது நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்விப் பகுதி வேலைகள் நிமித்தம் (அ) அரசாங்க கொந்துருத்தார் (ஆ) கூலியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கேள்விப்பத்திரங்கள் மேற்படி வேலைகள் சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இரண்டு பிரதிகளை ஒரே உறையில் சீல் வைக்கப்பட்டுத் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் “ மாத்தறை அரசாங்க அதிபர், மாத்தறை மாவட்டம் ” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் மாத்தறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காணிப் பகுதியில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் (1) முளடியன நீர் விநியோகிக்கும் திட்டம் (2) தேவாளகம–மஹமடவள வீதி 1 ம் கட்டை (பாலம்) சம்பந்தமான கேள்விப் பத்திரம், என்று குறிப்பிடல் வேண்டும். 1969.3.12 ந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன் கேள்விப்பத்திரச் சபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி, அனுப்பப்படல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

5. 1969.3.7 ந் திகதி பகல் 12 மணி வரை மாத்தறைக் கச்சேரியிலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். நியமிக்கப்பட்ட பத்திரங்களில் விண்ணப்பிக்காவிட்டால் ஆலோசனைக்கு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

6. கேள்விக்காரர்கள் பிழை திருத்தங்கள் செய்திருந்தால், அழித்திருந்தால் ஒவ்வொரு திருத்தங்களும் கேள்விப்பத்திரகாரரால் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன் ரூபா 50 வைப்புப் பணமாக மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் பேரில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டுச் சமர்ப்பிக்கும்போது தேவையான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இது பற்றியவர்களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் இதற்குரிய பிணைத் தொகையைக் கட்டி ஒப்பந்தத்தைச் செய்ய மறுத்தால், அன்னாரின் கேள்விப்பத்திர வைப்புப் பணம் திருப்பிக் கொடுபட மாட்டாது.

9. கேள்விப்பத்திரங்களை ஒப்புக் கொண்டபடிக்கு கேள்விக்காரர்களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினல், கேள்விக்காரர்களுக்குக் கிடைத்திருக்குமென்று நம்பப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதின் பிறகு மற்றும் வைப்புப் பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

10. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர்கள் முழுத் தொகையில் 5 சத வீதத்தை, பிணைத்தொகையைக் கட்டி வேலை திருப்திகரமாகக் குறிப்பிட்ட காலத்தில் முடித்துக் கொடுப்பதற்கென, மாத்தறை அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப்பணம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

11. ஏதேனும் ஒரு கேள்வியை (ரெண்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ, அரசாங்கத்துக்குப் பூரண அதிகாரமுண்டு.

12. கேள்விப்பத்திரச் சபையின் அனுமதியில்லாமல் ஏற்கப்பட்ட கேள்விக்காரர் வேறு யாராகிலும் ஒருவருக்கு வேலையை ஒப்படைத்தல் அல்லது ஒரு பாகத்தைக் கூலிக்குச் செய்வித்தல் கூடாது. அப்படிக் கேள்விக்காரர்கள் யாராகிலும் வேறொருவருக்கு அட்டேர்ணி அதிகாரத்தைக் கொடுத்தால் அதை நிராகரிக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு.

13. கொந்துருத்காரர் கையின் கீழ் வேலை செய்வோர் ஒருவனைக் குறித்து ஏதும் தகராறுகள் இருப்பின், மாத்தறை அரசாங்க அதிபருக்குக் கடிதமூலம் அன்னாரின் சேவையை நிறுத்தும்படி கொந்துருத்காரருக்கு அறிவிக்க அதிகாரமுண்டு.

14. கொந்துருக்காரர்கள் இலங்கை அரசாங்க சார்பில் திணைக்கள அதிபர் உடன் கைத்தாட்சிடப்படலாம். இலங்கை அரசாங்க சார்பில், கொந்துருத்காரருடன் கையொப்பமிடுவோரின் தராதரம் கொடுக்கப்படல் வேண்டும்.

15. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் இதற்கு முன் பாரம் எடுக்கப்பட்ட கொந்துருத் வேலையில் ஈடுபட்டிருக்கும் வேலை சம்பந்தமாக மேற்பார்வையாளர் அதிகாரிகளிடமிருந்து, அத்தாட்சிப் பத்திரம், வைப்புப் பணம் பற்றுச்சீட்டுடன் போதிய காலத்துக்குள் மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16. யாராகிலும் ஒரு கேள்விப்பத்திரத்தை ஏற்றுக் கொள்ளும் தறுவாயில் பிணை தேவைப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் அவசியமான காரணங்களைப் பூர்த்தி செய்யத் தயாராயிருத்தல் வேண்டும்.

17. அரசாங்க வேறு திணைக்களத்தில் கொந்துருத் வேலையில் ஈடுபட்டிருக்கும் கேள்வியாளர் வேறு வேலை செய்யும் திணைக்களத்தின் பெயரும் அதன் மாவட்டத்தையும் தரல் வேண்டும்.

18. அரசாங்க வேலை திருப்திகரமாகச் செய்யப்படாத ஒப்பந்தக்காரரின் பட்டியலில், கொந்துருத் கேள்வியாளரின் பெயர் இருந்தால், அன்னாரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

பீ. டபிள்யு. சீ. த சில்வா,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 10 ந வ.

2–630—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### புத்தளம் உபபிரிவு

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் வடமேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் அவரின் குருநாகல் அலுவலகத்தில் 25.3.69 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரையும் பெற்று உடனே திறக்கப்படும்.

| வேலைவிபரங்கள் | பதிவுத்தொகை ரூபா. | கேள்விக் கட்டணம் ரூபா. | மாசவேலை விகிதம் |
|---|---|---|---|
| (1) கருக்கு மடுவாவுக்குப் பாதை ஆக்குதல் | 70,000 .. | 100 .. | 15% |
| (2) குசலைக்குளம் திருத்துதல் | 1,35,000 .. | 200 .. | 10% |
| (3) திமில பால குளம் வெள்ள பாதுகாப்பு வேலை | 1,30,000 .. | 200 .. | 10% |
| (4) மகாவெலியாய முதலாம் பகுதி நீர்ப்பாசன கஷ்ட நிவிர்த்தி | 25,000 .. | 25 .. | 25% |
| (5) தப்போவாவில் இரணவாடி வீடு அமைத்தல் | 20,000 .. | 25 .. | 25% |

மேலே கூறப்பட்ட 2, 3 வது வேலைகள் மண்தள்ளும் யந்திர சாதனங்களால் செய்யப்படவேண்டும்.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் மேலே கூறப்பட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், சமூகக்கூட்டுறவுச் சங்கங்களும் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்கள் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம் புத்தளம், நிக்கவரட்டியா ஆகிய இடங்களில் அலுவலக நேரங்களில் 12.3.69 தொடக்கம் 21.3.69 வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது அரசாங்கத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விவரங்களைவும் அவற்றின் பெறுமதிகளையும் அவை திருப்திகரமாகச் செய்யப்படுகின்றனவா என்பதை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரமொன்றுபெற்றுச் சமர்ப்பிக்கவேண்டும். வேலைகளுக்கு நேரே காட்டப்பட்ட கேள்விக்கட்டணத் தொகையை இக்கந்தோரிலோ அல்லது ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்த பின்னரே வெற்றுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இக் கேள்விக்கான மேலதிக விபரங்கள் யாவற்றையும் எனது அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. மு. சுப்பிரமணியன்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
புத்தளம் உபபிரிவு.

புத்தளம்,
1969 ம் ஆண்டு பெப்ருவரி மீ 12 ந வ.

2–734—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 1 ந் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ந் திகதி 1969 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்த ஒரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்திலிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாயவிரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து, அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு நிலைய பொறுப்பு அலுவலாளர், நோயாளிகளுக்கும் ஊழியருக்கும் வேண்டிய அரிசியை (நோயாளியானாலும் ஊழியரானாலும் அரிசிக்கூப்பன் கொடுத்தவர்களுக்கு) பெறுவதற்கு அனுமதிப்பத்திரம் உணவுப்பகுதியிடமிருந்து பெற்றுக் கொடுப்பார். இவ்விதம் கொடுக்கப்படும் அரிசி இனமாகவோ அல்லது குறைக்கப்பட்ட விலையிலோ 19.12.66 க்குப் பின் உணவுப்பகுதியால் நிர்ணயிக்கப்பட்டதாய் இருக்கும்.

புத்தளம்,
1969 ம் ஆண்டு பெப்ரவரி மீ 11 ந் உ.

ஆர். எச். பீறிஸ்,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

**குறித்த அட்டவணை**

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி |
| | ரூ. | ரூ. | | | | | | | | | |
| மாதம்பை பிரசவ விடுதி .. | 100 .. | 300 | 21.3.69 காலை 10.00 மணி | 150 .. | 150 .. | 150 .. | 500 .. | 400 .. | 400 .. | 400 .. | 1,500 |

2-604—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

## நீர்ப்பாசன திணைக்களம்—அனுராதபுர உப பிரிவு

வட மத்திய மாகாணத்தில் அனுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள நாச்சியாதுவ பகுதியில் எஸ். எல். டீ. கால்வாயின் பாதையில் ஐந்தாவது (5) மைலில் இரண்டு அங்குல (2") கற்கள் தேடி அடுக்குவற்கான கேள்விப்பத்திரங்கள் வடமத்திய பிரிவு பெரும் பகுதி நீர்ப்பாசன பொறியியலாளரால் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 13 ந் திகதி வியாழக்கிழமை (1969.3.13) காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடனே அவ்விடத்திலேயே திறக்கப்படும்.

நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 20,000 க்கு அல்லது, அதற்கு கூடிய தொகைக்கோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத்தகுதியுடையவர்கள்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள், அனுராதபுரம்/மகாகந்தராவ/பதவிய/ராஜாங்கனை ஆகிய இடங்களில் உள்ள நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில், 1969 ம் ஆண்டு மாசி மாதம் 25 ந் திகதியில் இருந்து 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ந் திகதி பகல் 12.00 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர், தங்கள் பதிவுப் புத்தகங்களுடன், தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி, கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக்கட்டணமாக ரூபா 25.00 கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் செலுத்த வேண்டும் தொகையை ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

மேலதிக விபரங்களை அனுராதபுர நீர்ப்பாசன உப பிரிவுக்கந்தோரில், அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்.
அனுராதபுர—உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு மாசி மீ 10 ந் உ.

2-654—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

## நீர்ப்பாசனத் திணைக்களம்—யாழ்ப்பாணம் உபபிரிவு

நீர்ப்பாசனத் திணைக்களம் யாழ்ப்பாணம் உபபிரிவு பகுதிக்கு நிதி யாண்டு 1968/69 ல் பொருள்களை ஏற்றியிறக்கல் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் வவனியாவிலுள்ள, வட பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 13 ந் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

2. ரூபா 25,000/– தொகைக்கு அல்லது அதற்கு மேற்பட்ட நீர்ப் பாசனத் திணைக்களத்திலே பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் மாத்திரம் இக்கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக்க தகுதியுடையவர்கள். இவர்கள் நடப்பு வருட லைசென்சு பெற்ற சொந்த லொறி உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

3. வட பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவனியா உப பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர், கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு, வவனிக்குளம் முதலியோரிடமிருந்து அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ந் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்விக்காரராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தான் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், சொந்த லொறி பற்றிய விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப் பத்திரங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப் பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமென றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப் பத்திரங் கள் வழங்குமுன் கிளிநொச்சி, மன்னார், வவனியா, முல்லைத்தீவு, வவனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 25/– கேள்விக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இத்தொகையை ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டு கட்டிஞலும் போதுமானது.

4. இக்கேள்வி பற்றிய மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் யாழ்ப்பாணம் உப பிரிவு, கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாணம் உப பிரிவு.

கிளிநொச்சி,
1969 ம் ௵ மாசி ௴ 5 ந் உ.

2–637—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

இல. இப/333/260 (68/69)

## காலிக் கச்சேரி—கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்திலே, கீழே காட்டப்படுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள வேலைகளுக்காக 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிவரை கொழும்பு (த. பெ. 500) காணிக் கொமிசனர் திணைக்களக் கேள்விப்பத்திரச் சபைத்தலைவரால் கோள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தோர் அக்காரியால யத்தில் சமுகமாயிருக்கலாம். கேள்விப் பத்திரங்களைப் போடுதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டி, காலிமுகத்தில் அமைந்துள்ள செக்ரேரியட் கட்டிடத்தின் மூன்றுவது மாடியிலுள்ள காணிக் கொமிசனர் காரியால யத்தில் 357 ஆம் இலக்க அறையில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. காலி மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட பத்திரங்களில் இரு பிரதிகளைக்கொண்டதாகக் கேள்விப் பத்திரங் களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலை விபரங்கள் சம்பந்தமாயுள்ள படத்தைக் காலி மாவட்ட அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் பார்வை யிடலாம். அதுசம்பந்தமான முழுவிபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ்வேலைகளுக்காக அதற்கு முன் னேகாட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு கொந்தருத்து வேலைக்காக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட கொந்தருத்துக்காரர்களும், அரசாங்கவேலை, நீர்ப்பாசனம், கல்வி அல்லது வேறு திணைக்களங்களில் அவ்வவ்வேலைக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, இவ்வேலைகளை நல்முறையில் செய்து முடிப்ப பதற்குரிய தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலைகளுக்காக விண்ணப்பிக்க முடியும். ஆயினும் அவ்வாறு பதிவு செய்திருத்தலையும் கேள்விக்கான வைப்புப்பணம் ரூபா 100 செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆந் திகதி பிற்பகல் 3.00 வரை கேள்விக்கான பத்திரங்கள் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் வைப்புப் பணம் செலுத்தத்தேவையில்லை. ஆனால் அச்சங்கங்களுக்குரிய திணைக் களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகுதி சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியேயுள்ள ஏதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்பு திறை சேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "........................................ பொருட்டுக் கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு எல்லா கேள்விப் பத்திரங்களிலும் கையெ முத்திட்டு முத்திரை (சீல்) வைத்துப் பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஸோமபால களுஆரச்சி,
உதவி அரசாங்க அதிபர்.
காலி அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, காலி,
6.2.1969.

### அட்டவணை

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 1. லன்சியாகே வத்த குடியேற்றப் பாதை அமைத்தல் | காலி நாலுகடவத்தை | 30,000 |
| 2. மாயாகடுவ–அறம்பகொட வீதி அமைத்தல் | தல்பே பத்து .. | 20,000 |
| 3. இகல கீம்பிய–நாத்தெவெல வீதியில் 1 வது மைல் பாலம் அமைத்தல் | கங்கபொட பத்து .. | 20,000 |
| 4. பஞபிட்டிய குடியேற்ற வீதி சீனிகொடைக்குக் குறுக்கே அமைத்தல் | வல்லபொட பத்து .. | 25,000 |
| 5. திவிலான குடியேற்ற வீதி கல் கேவரை அமைத்தல் | தல்பே பத்து .. | 20,000 |
| 6. பம்பரவாண (குடியேற்றம்) ஹினிதும வீதி 1 வது மைல் அமைத்தல் | பெந்தோட்டை வலல்லாவிட்டிக் கோருளை கிழக்கு | 50,000 |
| 7. தாம்மல–கல்விட்டிகல 3 வது மைல் கல்பதித்து தாரிடுதல் | ஹினிதும் பத்து .. | 50,000 |
| 8. கியாரே குடியேற்றத்துக்குள் பாதை கல்பதித்துத் தாரிடுதல் | தல்பே பத்து .. | 40,000 |
| 9. பகல லேல்வல கிரந்தலஹேன குத்தகைக் காணிகளுக்குச் செல்லும் வீதி, 1 வது மைலில் எஞ்சிய வேலை | கங்கபொட பத்து .. | 40,000 |
| 10. ரூமஸ்ஸல குடியேற்றத்துக்கு நீர் விநியோகத் திட்டமொன்று அமைத்தல் | தல்பே பத்து .. | 50,000 |

2–593—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 36,429 சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 1.3.1969 சனிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும். கோரிக்கைகள் ரூபா 400 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. மதியாபரணம்,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969 ம் ௵ பெப்புருவரி ௴ 11 ந் உ.

2–736—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

## பொதுவேலைத் திணைக்களம்

லக்கலை பகுதியில் காரியாதிகாரி காரியாலயமும் காரியாதிகாரி இல்லமும் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் வடமத்திய மாகாணம் பொது வேலைப்பகுதியின் கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள நாலந்தை மாவட்டப் பிரதம நிர்மாண/நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறியியலாளரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறியியலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக் கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 81,000 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100/– செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ம் திகதி வெள்ளிக் கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறி யியலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்துக்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்பு பவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/– வீதம் மீளளிப்புச் செய்யப்படாத் தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறியியலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப் பிட்ட பொறியியலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையி லுள்ள பொதுவேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களி லுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பெர்னாந்து,
கண்காணிப்பு பொறியியலாளர்,
வடமத்திய மாகாணம்.

கண்காணிப்பு பொறியியலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம்,
அனுராதபுரம்,
1969.2.13.

2–709—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## வவுனியாக் கச்சேரி

வவுனியா மாவட்டத்தில் கீழ்க்காணும் கட்டு வேலைகளுக் காக வவுனியா அரசாங்க அதிபரால் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை சீல் வைத்த வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

1. திருந்தியமுறைக் காளைஸ்தாபனம் கட்டல்—ஒட்டுசுட் டான்
2. திருந்தியமுறைக் காளைஸ்தாபனம் கட்டல்—புதுக்குடி யிருப்பு.

2. வவுனியா அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய கேள் விப்பத்திரத்தில் இணைப்பிரதியில் கேள்விப்பத்திரம் அனுப்பு தல் வேண்டும். இதைப்பற்றி மேலதிக் தகவல்கள் வவுனியா அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவு செய்த கொந்தராத்துக்காரர்க ளும் அனுமதிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் மாத்திரம் கேள்விப்பத்திரம் அனுப்புவதற்கு அருகதை யுடையவராவார்கள்.

3. ஒவ்வொரு கட்டுவேலைக்கும் ரூபா 25/- வீதம் கச்சேரியில் கட்டுமாறு டென்டர் செய்பவர் வேண்டப்படுவர். பணம் கட் டிய பற்றுச் சீட்டு காட்டினால் மட்டுமே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை கட்டுப் பணம் கட்டவேண் டியதில்லை.

பீ. சீ. பெரேரா,
வவுனியா அரசாங்க அதிபர்.

கச்சேரி வவுனியா,
5.2.69.

2–567—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## வித்தியா பகுதி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு மட்டக்களப்பு கல்விக் கந்தோர் கேள்விச் சபைத்தலைவரால் 1969 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14 ந் திகதி பி. ப. 2.30 மணி வரை கேள்விவிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலையின் தன்மை |
|---|---|
| மட்/கோட்டைமுனை மகா வித்தியாலயம் | பாடசாலைக் கட்டடத் திருத்த வேலைகள் |

**குறுக்கம்—மட் = மட்டக்களப்பு**

2. கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சில் அரசாங்க வேலைப் பகுதியில் அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் கட்டுவேலைகட்கு 10,000/- ம், அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு, (ரூ. 15,000 க்குக் குறைந்த வேலைகட்கு நீர்ப்பாசன பகுதியில் பதிவு செய்யப்பட் டுள்ள ஒப்பதக்காரர்கள் கேள்விகள் அனுப்புவதற்கு தகுதியற்றவர்) அவர்கள் கொழும்பு 2, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதிரிசியின் காரியாலத்தில் அல்லது மட்டக்களப்பு பிரதேச வித்தியாதிபதியின் அலுவலகத்தில் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எக்கச்சேரியிலேனும் ஒவ்வொரு வேலைத் தொடர் பிலும் ரூ. 100 கட்டுப்பணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டை மட்டக் களப்புப் பிரதேச வித்தியாதிபதிக்கு சமர்ப்பிக்குமிடத்து 1969 ஆம் ஆண்டு 13 ந் திகதி நண்பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விக் கட்டுப்பணங்கள் கட்டுவதற்கான பணங்கட்டும் நறுக்குகள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக்காரியதிரிசியின் அலுவலகத்து பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது மட்டக்களப்பு பிரதேச வித்தியாதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். காசோலை கள், காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலே குறிப்பிட் டுள்ள தொகைகளுக்கு தாம் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களென சான்று சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே பணங்கட்டும் நறுக்குகள் கொடுபடும்.

3. மேற்போந்த 3 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு நீர்ப் பாசயன பகுதி, அரசாங்க வேலைப்பகுதி அல்லது கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கமைய அங்கீகரிக்கப் பட்டுள்ள சங்கங்களும் இவ்வேலைக்கு கேள்விகள் அனுப்பலாம். அங்கீ கரிக்கப்பட்டுள்ள சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டுவதிலிருந்து தவிர்வு அளிக்கப்பட்டுள்ளன. கேள்விப் பத்திரம் வழங்கப்படுமுன் இச்சங்கங்கள் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு தாம் பதிவு செய்யப்பட்டுள்ளவையென சான்று சமர்ப்பிக்கவேண்டும்.

4. மேற்போந்த 2 ம், 3 ம் பந்திகளில் காட்டியுள்ள பிரகாரம் மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதியிடம் இருந்து பெறற் பாலனவாகிய படிவங்களில், இரட்டைப் பிரதியில் கேள்விகள் அனுப்பப்பட வேண்டும். இவரிடமிருந்து சகல விபரங்களும், தகவல்களும், பெற்றுக் கொள்ள முடிவதுடன் வேலை பற்றிய மாதிரிப் படங்களையும் இவருடைய அலுவலகத்தில் பார்வையிடலாம். அஞ்சல்மூலம் அனுப்பப்படும் கேள் விப்பத்திரங்கள் மட்டக்களப்பு கல்விக் கந்தோர் கேள்விச்சபைத் தலை வரின் விலாசத்துக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். ஸ்தல கேள்வியாளர்கள் தமது கேள்விப்பத்திரங்களை பதிவு அஞ்சல் மூலம் அனுப்ப விரும்பாதவிடத்து அவர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் காகித உறைகளில் வைக்கப்பட்டு பொறியிடப்பட்டு கேள்விப் பத்திரங்களை மட்டக்களப்பு வித்தியா கந்தோரின் அலுவலக உதவியாளரிடம் நேரிற் கொடுத்து, அவர் அதைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒரு கடிதத்தை அவரிடமிருந்து பெறவேண்டும். குறித்த காகித உறையின் மேற்பக்கத் தில் கேள்வி என்ன வேலை சம்பந்தமானதெனவும், கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு வித்தியா கந்தோரில் 1969 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14 ந் திகதி பி. ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்களைத் திறக்கும் அங்கு பிரசன்னமாயிருக்கும் கேள்வியாளருக்கு கேட்கக்கூடியதாக கேள்வியாளர்கள் பெயரையும் அவர்கள் கோரியுள்ள வீதங்களையும் வாசிப்பார்.

6. கேள்விகள் முடிவடையும் திகதியிலிருந்து 6 வார காலம் வரை தாம் கோரிய விகிதங்களின்படி வேலையை மேற்கொள்ள ஒப்புக் கொள்ள வேண்டும்.

7. மேலும் தேவைப்படும் விபரங்கள் மட்டக்களப்பு பிரதேச வித்தியாதிபதியின் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம். அங்கே கேள்விகள் சம்பந்தமான பத்திரங்களையும் பார்வையிடலாம்.

8. 30.1.1966 க்கு முன்னர் பாடசாலை வேலைகட்கென வித்தியாபகுதியால் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்வி அறிவித்தலின் நோக்கத்துக்காக கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சால் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களாக கருதப்படுவார்.

வெ. சங்கரலிங்கம்.
வித்தியாதிபதி, கிழக்குப்பிரதேசம்.

வித்தியா கந்தோர்,
மட்டக்களப்பு 11.2.69.

2—694—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### 2. சேற்றுப்பம்பிகள் (ஸ்லட்ஜ) வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

2½ அங்குல அளவு கொண்ட சேற்றுப்பம்பிகள் (ஸ்லட்ஜ) 2 வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 1969.3.14 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக் கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பு. (ஆ) இறக்குமதி செய்த தொகை அத்துடன் (இ) இறக்குமதி செய்து கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1 காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன்மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காக குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " சேற்றுப் (ஸ்லட்ஜ) பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால்மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கோள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.3.14 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமூக மளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969.2.14.

2—739—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல, 14,842

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மணிக்கு 4,500 கலன்கள் வீதம் இறைக்கக்கூடிய சுமக்கத்தக்க பம்பிகள் 20 வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

20 பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 1969.3.21 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக் கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பு. (ஆ) இறக்குமதி செய்த தொகை அத்துடன் (இ) இறக்குமதி செய்து கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக்காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50/– கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிப்பிட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " 20 சுமக்கத்தக்க பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர் எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப்பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1 எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.3.21 ந் திகதி முற்பகல் 11.15 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு பெப்புருவரி மீ 10 ந வ.

2-740—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842.

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## காட்டுத் திணைக்களம் ஏலவிற்பனை

கிளிநொச்சியில் உள்ள நல்ல தண்ணிவில்லு காட்டில் அமைந்துள்ள காலையில் 1173.1 கன அடி கொண்ட முதிரை, பாலை மரங்கள் 26.2.69 ம் திகதி பெப்ரவரி மாதம் 1969 ம் ஆண்டு காலை 10 மணிக்கு வடபெரும்பாக வன அதிகாரியால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் முன்னதாகவே மரங்களைப் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

மேற்கொண்டு விபரங்களுக்கு கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது கிளிநொச்சி வட்ட வன அதிகாரியிடமோ பெற்றுக்கொள்ளலாம்.

எம். ரத்வத்த,
வட பெரும்பாக வன அதிகாரி,
யாழ்ப்பாணம்.

பகுதிவன உத்தியோகத்தர் அலுவலகம்,
யாழ்ப்பாணம், 7.2.69

2-728—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## நடுநாயகம் திணைக்களம்
### மோட்டார் துவிச்சக்கரவண்டி ஏல விற்பனை

இத்திணைக்களத்துக்குச் சொந்தமான டனுவியா 4 ஸ்ரீ 6534 மோட்டார் துவிச்சக்கரவண்டியை 23.2.69 ல் காலை 10 மணியளவில் கோட்டடியிலுள்ள நடுநாயகம் திணைக்களக் கட்டிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனையின்போது கூடிய பெறுமதி வைத்துக் கேட்பவர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி அதே நேரத்தில் மோட்டார் துவிச்சக்கரவண்டியை அப்புறப்படுத்த வேண்டும்.

தேவைப்படின் அலுவலக நேரத்தில் மேற்படி வண்டியைப் பார்வையிடலாம்.

மதிக்கப்பட்ட தொகை ரூபாய் 850/-.

2-564—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## ஏல விற்பனை

கல்முனை நீதவான் கோட்டிலே பறிமுதல் செய்யப்பட்டதும், கோரப்படாததுமாய் இருக்கும் பொருட்கள் யாவும் 1969 ம் ஆண்டு பங்குனி மாதம் 2 ம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்களை வாங்குவோர் முழுப்பணத்தையும் உடனடியாகக் கொடுப்பதோடு வாங்கிய பொருட்களையும் உடனடியாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

நீதவான் கோடு, ரீ. என். அபயவீர,
கல்முனை 7.2.69. நீதவான்.

2-565—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

---

## ஏல விற்பனை

உபயோகிக்க இயலாத பொலிஸ் உத்தியோக உடைகள் முதலியன எதிர்வரும் மார்ச்சு மாதம் 2 ம் திகதி காலை 10.00 மணிக்கு மாத்தறை பொலிஸ் நிலையத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

பின்வரும் பொருட்கள் இவ் ஏல விற்பனையில் அடங்கும்: 10 கைப்பட்டிகள், 59 சோடி பூட்ஸ்சுகள், 4 பேரே தொப்பிகள், 26 லெதர் பட்டிகள், 17 லெதர் குண்டுப்பைகள், 6 சோடி கன்வஸ் சப்பத்துக்கள், 22 காக்கி மேலங்கள், 11 காக்கி சேட்டுகள், 34 சோடி காக்கி காற்சட்டைகள், 3 சோடி காக்கி அங்கிகள், 22 படுக்கை விரிப்புகள், 33 மெத்தைகள், 34 சோடி புற்ரீஸ், 1 தொப்பி, 27 மழை அங்கிகள், 4 மழை அங்கிப்பட்டிகள், 142 பொலிஸ் தொப்பிகள், 14 சோடி நீல கால்மேசுகள், 278 லெதர் சப்பாத்துகள், 5 சோடி பூட்சுகள், 2 சோடி லெதர் சப்பாத்துகள், 1-80 கலன் அளவுடைய ரின், 4 துவிச்சக்கரவண்டி பெடல்கள், 6 பூட்டுகள், 4 அளவு டேப்பூகள், 2 மேசை மின் விசிறிகள், 2 கில்லு அளவுகள்.

ஏல விற்பனை முடிந்தவுடன் பணத்தைச் செலுத்தி பொருட்களை உடன் பெற்றுச் செல்லவேண்டும்.

க. முருகேசபிள்ளை,
பொலிஸ் அதிகாரி,
தென் மாகாணம் (கிழக்கு),
மாத்தறை.

பொலிஸ் அலுவலகம்,
மாத்தறை.

2-591—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

# நாநாவித அறிவித்தல்கள்

எண். என்எ/கா/8/72.

## மத்துகமவில் கட்டடம் அமைத்தற்குரிய காணித்துண்டு

மத்துகமவில் 1 ரூட். 12·6 பேர்ச்சர்கள் விஸ்தீரணம் உள்ள ஒரு காணித்துண்டு பகிர்ந்தளிக்கும் விடயமாகக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விபரங்களை அறிந்து கொள்ளுவதற்கு இக்காரியாலயத்துக்குத் தயவுசெய்து விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்தேதி : 1969 ம் ஆண்டு, மார்ச்சு மாதம் 15 ம் தேதி.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு சனவரி மீ 11 ந உ.

2–663—21.2.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,842

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 3.1.69 | வெள்ளி .. | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் .. | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் .. | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி .. | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி .. | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** .. | 7.2.69 | வெள்ளி .. | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி .. | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி .. | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 27.2.69 | வியாழன் .. | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மாச்சு** .. | 7.3.69 | வெள்ளி .. | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி .. | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி .. | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி .. | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** .. | 3.4.69 | வியாழன் .. | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி .. | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி .. | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி .. | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் .. | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **மே** .. | 9.5.69 | வெள்ளி .. | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் .. | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் .. | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி .. | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **யூன்** .. | 6.6.69 | வெள்ளி .. | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி .. | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி .. | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி .. | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந வ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.